RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 28, 28 ஜனவரி 2022 இதழ்:- 40

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com


பொங்கலுக்கு முதல் நாள் நடந்த பொங்கல்


தென்னிலங்கை அரசியலில் எட்டப்படும் இராஜதந்திர அடைவுகள்

சீனப் பொறிக்குள் சிக்கும் இலங்கை


GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Super Visa Insurance
Dir: 416 528 1407
www.gtbrokers.ca

## பகற்கனவு காண்கிறார் ஜனாதிபதி கோத்தபாயா!

## நீதி நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என்கிறார் சம்பந்தர்

நாட்டில் புரையோடிப் போயிருக்கும் நீண்டகால தேசிய இனப்பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண்பதை தவிர்த்து ஏனைய அனைத்து விடயங்களையும் கையாள முடியும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பகற்கனவு கண்டு கொண்டிருக்கின்றார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பகிரங்கமாக சாடியுள்ளார். (8ம் பக்கம் பார்க்க)





## தமிழ்க்கட்சிகள் ஒன்றாக இந்தியாவை நாடியமை சாதாரண விடயமல்ல

13ஆம் திருத்த சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் மற்றும் 1987 ஆம் ஆண்டு வாக்குறுதிகளை முழுமையாக நடைமுறைப்படுத்த தமிழ் அரசியல் கட்சிகள் வலியுறுத்தியுள்ளமை வழமை போன்ற செயற்பாடாக இருந்தாலும் இப்போது இதனை சாதாரணமாக கருத முடியாது எனஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ரோஹன லக்ஸ்மன் பியதாச தெரிவித்துள்ளார். ஆகவே தமிழர் தரப்பின் பிரச்சினைகளை செவி மடுத்து அவர்களின் (6ம் பக்கம் பார்க்கக)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

## விடுதலைப் புலிகளின் தற்போதைய ஆயுதம் பிரச்சாரமும் பரப்புரையுமே!

### ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சரின் செயலாளரர் கதறல்



விடுதலைப்புலிகள் தற்போது தற்கொலை குண்டுகளை பயன்படுத்துவதில்லை பரப்புரையும் பிரச்சாரங்களும் நீதிமன்ற நடவடிக்கைகளுமே தற்போது அவர்களின் ஆயுதம் என தெரிவித்துள்ள இலங்கையின் வெளிவிவகார (8ம் பக்கம் பார்க்க)

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி!
போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE


BUYING OR SELLING OR LEASE !
Residential or Commercial
Team SIVA WILL BRING THE BEST RESULTS!
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Piravien Siva
B.Comm. Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
18 Years Real Estate Experience
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd.,
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Keele/Finch
Toronto $499,900
Bedrooms: 2 Washrooms: 1
York University And New Lrt Line
Driftwood/Finch
Toronto $699,000
Bedrooms: 3 Washrooms: 2
Fully Renovated, Brand New Kitchen
Markham/Ellesmere
FOR LEASE
Scarborough $1,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout
Don Mills/Sheppard
FOR LEASE
Scarborough $2,200
Bedrooms: 1+1 Washrooms: 2
615Sqft+176 Sqft, Open Concept
Hwy 401/ Weston Rd
Toronto $799,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Beautifully Renovated Home
Salem & Rossland Rd
Ajax $1,059,000
Bedrooms: 4 Washrooms: 3
Potential Sep.Entrance For Basement
Grandview /Woodstream
Oshawa $1,549,900
Bedrooms: 4 Washrooms: 4
Over 3,322 Sq Ft, Open Concept
Midland Ave & Danforth
Scarborough Call for Price
Bedrooms: 3+1 Washrooms: 3
Totally Renovated In 2017
65 YEARS LASH
HERSH
YOU'RE INVITED TO
THE fourme VIP
PREVIEW EVENT
GET PRIORITY ACCESS TO THE MOST
ANTICIPATED RELEASE OF 2021
BRAND NEW RELEASE
STARTING IN THE 500s
EXTENDED DEPOSIT STRUCTURE • ASSIGNMENT
CAPPED DEVELOPMENT FEES • LEASE DURING OCCUPANCY
1151 MARKHAM RD
FOURME SALES CENTRE
SUNDAY NOV 21ST / 10A-6P
TO RSVP, EMAIL, DM OR CALL ME
fourme
VIP PREVIEW
EVENT
Birchmount /Ellesmere
Scarborough Call for Price
Bedrooms: 2 Washrooms: 2
Renovated With High Quality
Midland/Eglinton
Scarborough $419,000
Bedrooms: 3 Washrooms: 2
Bright Unit With A Balcony
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 JAFFNA SUPER STORES**
**1221 MARKHAM RD - 14**
**(MARKHAM / EELESMERE)**

**3 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**4 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**


**5 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**6 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

**மொன்றியல் தொடர்புகளுக்கு**
**மார்சே துர்க்கா**
**(514) 276 9262**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.




## கியூபாவிற்கான சுற்றுலா

கனடாவிலிருந்து குளிர்காலச் சுற்றுலாவுக்காக உங்களை பாதுகாப்பாக
கியூபாவுக்கு அழைத்துச் செல்கின்றோம்.
உங்கள் விமானச் செலவு, தங்குமிட வசதிகள் உட்பட அனைத்துச் செலவு (Pakcage)
உடன் மேலதிகமாக 400.00 டொலர்கள் மட்டுமே!
இத்தொகையில் ஊர்க்கோழி, ஆட்டுக்கறி, கடலுணவு வகைகள், நமது முறைப்படி சமைத்து
நீங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கே கொண்டு வந்து தருவதுடன் குதிரைச் சவாரி,
5க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்களையும் பார்வையிடலாம்.

முதியோருக்கான விசேட கவனிப்பு

மேலதிக விபரங்கட்கு - தவா
**647.469.9839/647.333.0098**

04 ஜனவரி 2022, 25 ஏப்ரல் 2022 இரண்டு சுற்றுலா குழு புறப்படுகின்றது. பதிவு செய்து கொள்ளுங்கள்

# தமிழ்அரசியல் கைதிகள் விவகாரத்துக்கு விரைவில் தீர்வு வழங்குவதாக நீதிஅமைச்சர் உறுதி

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாக தடுத்து வைக்கப் பட்டுள்ள தமிழ் கைதிகள் எவரையும் அரசியல் கைதிகள் என அடையாளப் படுத்த நாம் விரும்பவில்லை. எனினும், இந்த விவகாரத்துக்குப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை செய்வதன் மூலம் விரைவில் தீர்வு களைப் பெற்றுக கொடுக்க அரசு தயா ராக இருக்கின்றது.” இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் வடக்கில் முன்னெடுக்கப்படவுள்ள நட மாடும் நீதிக்கான அணுகல் சேவை வேலைத்திட்டம் தொடர்பில் இன்று நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்

சிறைக்கைதிகளும் மனிதர்களே என்ற வாசகத்தை மாத்திரம் எழுதி வைப்ப தால் சிறைக்கைதிகள் பாதுகாக்கப் படப்போவதில்லை. கடந்த காலங்களில் சிறைச்சாலைகளில் இடம் பெற்ற தாக் குதல்கள், அச்சுறுத்தல் செயற்பாடுகள் குறித்து நாம் எமது எதிர்ப்பை வெளி ப்படுத்தியுள்ளோம். இதனை ஒரு போதும் நாம் ஏற்றுக் கொள்ளப் போவ தில்லை. அதே போல் இவ்வாறான ஒரு சில சம்பவங்கள் இடம் பெறுகின்ற கார ணத்துக்காக ஒட்டுமொத்த சிறைச் சாலை கட்டமைப்பையும் தவறாகச் சித்தரிக்கவும் முடியாது.

சகல நாடுகளிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. மாறாக இலங்கையில் மாத்திரம் இவை



இடம்பெறுவதாகக் கூறவும் முடியாது. எவ்வாறு இருப்பினும் எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறாத வகையில் சகல தரப்பினருக் கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒரு சிலர் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. விசாரணைகள் முன்னெடு க்கப்பட்டும் வருகின்றன.

பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை தமிழ் அரசியல் கைதிகள் என கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. நாட்டில் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட காரணத்தால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர்கள் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். எவ்வாறு இருப்பினும் இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தர மாகத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதையே ஜனாதிபதியும் வலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு தற்போது முயற்சிகளை முன்னெடுத்து வருகின் றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வது குறித்து ஆராயும் விதமாக ஜனாதிபதியால் நிபுணர்கள் குழுவும் நியமிக்கப்பட்டுள் ளது. 42 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படு கின்றன.

நீண்டகாலத்துக்கு இந்தப் பிரச்சி னைகளை இழுத்தடித்துக் கொண்டு செயற்பட அரசு தயாராக இல்லை. பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வொன்று அவசியம் என்பதையே ஜனாதிபதியும் பல சந்தர்ப்பங்களில் தெரிவித்தார். எனவேம், அது குறித்து விரைவில் தீர்மானம் எடுக்கப்படும்” — என்றார்.

# ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட மனைவி முடி இறக்கி காளி கோவிலில் வேண்டுதல்!

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டு கடந்த 24 ஜனவரி 2022 திங்கட்கிழமையுடன் 12 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளது.

இந்நிலையில் அதனை முன்னிட்டு பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட 25 ஜனவரி 2022 செவ்வாய்க்கிழமை கொழும்பு முகத்துவாரம் காளி கோவிலுக்குச் சென்று பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டு ள்ளார்.

அத்தோடு தனது கணவனுக்காக கொழும்பு முகத்துவாரம் கடற்கரை யில் இந்து ஆகம முறைப்படி முடி இறக்கி வேண்டுதலில் ஈடுப்பட்டார்.



**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# வடக்கு கிழக்கு தமிழ்மக்களுக்கு அரசமைப்பு விடயங்களில் ஆர்வமில்லை! வாழ்வாதாரத்தையும் அபிவிருத்தியையுமே விரும்புகின்றனராம் - மிலிந்த

வடக்கு கிழக்கு மக்களிற்கு அரசமைப்பு தொடர்பான விடயங்களில் ஆர்வமில்லை வாழ்வாதாரம் அபிவிருத்தியையுமே அவர்கள் விரும்புகின்றனர்என இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொராகொட தெரிவித்துள்ளார் இந்திய ஊடகமொன்றிற்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்

கடந்த செவ்வாய்கிழமை நாடாளுமன்றத்தின் முன்னிலையில் ஆற்றிய உரையில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச புதிய அரசமைப்பினை உருவாக்குவதற்காக தான் உருவாக்கியுள்ள நிபுணர் குழு குறித்து குறிப்பிட்டார். அதனை அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தின் முன்னிலையில் விவாதத்திற்கு சமர்ப்பிப்பேன் என அவர் தெரிவித்துள்ளார் அவருக்கு இதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும் என நான் கருதுகின்றேன்.

எனதுவாழ்க்கையில் இது தொடர்பான பல விடயங்களில் ஈடுபட்டவன் என்ற அடிப்படையில் வடக்கு கிழக்கு பகுதிகளிற்கு சென்றவேளை அவர்கள் அரசமைப்பு தொடர்பான விடயங்களில் ஆர்வமாக இல்லை என்பதை நான் அவதானித்தேன். இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொராகொட தெரிவித்துள்ள அவர் அவர்கள் வாழ்வாதாரத்தையும் அபிவிருத்தியையுமே விரும்புகின்றனர் அனைத்து அரசியல் கட்சிகளும் இதனை அடிப்படையாக வைத்தே செயற்படவேண்டும்.

இரண்டு விடயங்களில் ஒத்துழைப்பு இடம் பெறலாம் என நான் கருதுகின்றேன் ஒன்று அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய அரசமைப்பினை உருவாக்கும் யோசனை தொடர்பானது இரண்டாவது வடக்கு கிழக்கை எவ்வாறு அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பது தொடர்பான புரிந்துணர்விற்கு வருவது. ஏனென்றால் மக்கள் நாங்கள் அரசமைப்பு குறித்து தீர்மானிக்கும் வரை தங்கள் வாழ்வாதாரம் எதிர்காலத்திற்காக காத்திருக்கப் போவதில்லை என்றார்.



ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரை கூட சந்திக்கவில்லை என்பதே ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக முன்வைக்கப்படும் விமர்சனங்களில் ஒன்று. அத்துடன் குரோத பேச்சுக்களிற்காக இலங்கையின் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்பட்ட பௌத்தமதகுருவை ஜனாதிபதி நியமித்தமை குறித்தும் கரிசனைகள் காணப்படுகின்றன என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர்

நாங்கள் (இலங்கை) ஜனநாயக நாடு அங்கு பலவிதமான குரல்கள் ஒலிக்கும். இன்று உலகம் முழுவதிலும் துருவமயப்படுத்தல் பிரிவினை பூதாகாரமயப்படுத்துதல் போன்றவை காணப்படுகின்றன இது இலங்கைக்கு மாத்திரம் தனித்துவமான விடயமல்ல இந்த சூழமைவின் அடிப்படையிலேயே இதனை நாங்கள் பார்க்கவேண்டும்.

சமூக ஊடகங்கள் மற்றும் தங்கள் அடையாளங்களில் கவனம் செலுத்தும் இன்றைய உலகில் பிரிவினைகள் பலவிதமாக உள்ளன. இதனை இந்த சூழமைவிலேயே வைத்துப் பார்க்க வேண்டும் என்ற அவர்

வரலாறு முழுவதும் எங்களது மிகப் பெரும் சவால்களும் சந்தர்ப்பங்களும் இந்து சமுத்திரத்திலிருந்தே வந்துள்ளன. நாங்கள் போர்த்துக்கீசர்கள் ஒல்லாந்தர்கள் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் காணப்பட்டோம் அனைத்திற்கும் எங்கள் கேந்திர முக்கியத்துவமே காரணமாக காணப்பட்டது.

1980களில் இலங்கை அமெரிக்காவிற்கு நெருக்கமாக உள்ளது என கருதப்பட்ட வேளை இந்தியாவுடன் பதற்றம் காணப்பட்டது அதனால் விளைவுகள் ஏற்பட்டன. சீனா புதிய நாடு இந்த விடயத்தினை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து நாங்கள் எங்கள் வரலாறுகளில் இருந்து பாடங்களை கற்றுள்ளோம்.

சிலவேளைகளில் நாங்கள் தவறிழைக்கின்றோம் பாடங்களை கற்றுக்கொள்கின்றோம் இதுவே எங்கள் தலைவிதி நாடொன்றின் யதார்த்தம் இது நாங்கள் இதனை கையாள வேண்டும் என்றார்.

## தமிழ்மக்களின் எதிர்பார்ப்பான அரசியல் பிரச்சனைக்கு முதலில் தீர்வு வேண்டும்

தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பான அரசியல் பிரச்சினைக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டும். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

அரசியல் தீர்வு மாத்திரம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அல்ல. அதை விட அவர்களின் அத்தியாவசிய தேவைகளைத் தீர்ப்பதே முக்கியம். அவற்றைத் தீர்த்து வைப்பது தொடர்பிலேயே முதலில் நாம் கவனம் செலுத்துகின்றோம் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அநுரகுமார எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பான அரசியல் பிரச்சினைக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டும். ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டே தீரும். தமிழர் பிரதிநிதிகளையும் எமது அரசில் இணைத்துப் பயணிப்போம். ராஜபக்ச அரசு தமிழ் மக்களைப் புறக்கணித்து அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் இருந்தபடியால் தான் நாடு இன்று சர்வதேசத்திடம் மண்டியிட வேண்டிய நிலைக்கு வந்துள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராகக் குற்றங்களை இழைத்த ராஜபக்ச அரசு, அதற்கான பொறுப்பை ஏற்றுப் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரம் வழங்கியிருந்தால் இலங்கை விவகாரத்தில் ஐ.நாவும் சர்வதேச நாடுகளும் தலையிட்டிருக்க வேண்டிய நிலை வந்திருக்க மாட்டாது என்றார்.


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# புலிகளின் அரசியல் ஊடகத்துறைப் பேச்சாளர் தயா மாஸ்டருக்கு 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 வருட சிறைத்தண்டனை!

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை ஊடகப் பேச்சாளராக செயற்பட்ட தயா மாஸ்டர் என அழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதிக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத்தண்டனை வழங்கி வவுனியா மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தமிழீழ விடுதலை புலிகளின் ஊடகப் பேச்சாளராக இருந்த தயா மாஸ்டர் போரின் இறுதிக்கட்டத்தில் படையினரிடம் சரணடைந்தார். இந்த நிலையில் தயா மாஸ்டருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரால் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறிப்பாக கடந்த 2009ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் 2009 மே 18ஆம் திகதிக்கு உட்பட்ட காலப்பகுதிக்குள் தடை செய்யப்பட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டமை தொடர்பாக குறித்த வழக்கு தொடரப்பட்டது.

2006ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பயங்கரவாதம் மற்றும் குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாத செயற்பாடுகளை தடுத்தல் விதிகளின் கீழ் தண்டனை விதிக்கப்பட கூடிய குற்றத்தை புரிந்துள்ளதாக வவுனியா மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.


வழக்கு செயற்பாடுகள் தொடர்ந்து இடம் பெற்று வந்த நிலையில் 25 ஜனவரி 2022 வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது. வழக்கில் தயாமாஸ்டர் மற்றும்



அவர் சார்பாக சட்டத்தரணி எம்.எ.சுமந்திரன் ஆஜராகியிருந்தார்.

குறித்த வழக்கில் தயாமாஸ்டருக்கு கட்டாய சிறைத்தண்டனை வழங்க வேண்டிய பிரிவுகளின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது. அந்த குற்ற பத்திரிகை திருத்தப்பட்டு குறைந்த குற்றச்சாட்டுக்கள் மாத்திரம் அவர் மீது முன் வைக்கப்பட்டிருந்தது. அதன்படி அவர் தனது குற்றத்தினை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

# இலங்கைக்கு இந்தியா வழங்கிய கடனுதவியைத் தொடர்ந்து பிரிட்டனும் 3.7 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ் வழங்கியது



நல்லிணக்கம், நீதி மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அனைவரையும் உள்வாங்கிய, நிலைபேறான சமாதானத்தை உறுதி செய்வதென்பது வலுவான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு மிகவும் அவசியமான தாகும். அதனூடாக பெருமளவான வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்துக் கொள்ள முடிவதுடன் பொருளாதாரத்தின் இயலுமையை மேலும் வலுப்படுத்தவும் முடியும் என்று அமைச்சர் தாரிக் அஹமட் சுட்டிக்காட்டியிருப்பதாக இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

அத்தோடு சமூகங்களுக்கு இடையிலான மோதல்களை முடிவிற்குக்கொண்டுவருதல், மனித உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் சமூகங்களுக்கு இடையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை இலக்காகக்கொண்ட செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்காக மோதல்கள், உறுதிப்பாடு மற்றும் பாதுகாப்பு தொடர்பான நிதியத்தின் ஊடாக இலங்கைக்கு 3.7 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ் நிதியுதவியை வழங்குவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த செவ்வாய்கிழமை இலங்கை சென்றடைந்த பிரிட்டனின் பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் தாரிக் அஹமட் ஜனாபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட உயர்மட்டப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தார்.

அது மாத்திரமன்றி யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்ட அவர் வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர்கள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகளுடனும் சந்திப்புக்களை நிகழ்த்தியிருந்தார். இந்நிலையில் அமைச்சர் தாரிக் அஹமட்டின் இலங்கைக்கான விஜயம் தொடர்பில் இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரகத்தினால் 25 ஜனவரி 2022 செவ்வாய்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தொடர்புகள், முதலீடு மற்றும் நிதிச்சேவைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் தொடர்பில் ஆராய்ந்ததுடன் மனித உரிமைகளை உறுதிசெய்வதில் பிரிட்டனின் ஒத்துழைப்பையும் மீளவலியுறுத்தினார். அத்தோடு இலங்கைக்கான தனது விஜயம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் தாரிக் அஹமட், 'நல்லிணக்கம், நீதி மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு ஆகியவற்றை (19ம் பக்கம் பார்க்க)

# ஏமாறாமல் பேசுவது நல்லது

ஜனாதிபதியிடமிருந்து அழைப்பு வந்தால் எவ்வாறு பேசுவதென்று முடிவெடுக்கப்படுமென்று சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். அவர் தெரிவித்திருக்கும் ஒரு கருத்து முக்கியமானது. அதாவது, நாங்கள் குழப்பவும் விரும்பவில்லை அதேவேளை ஏமாறவும் விரும்பவில்லை.கடந்த ஆட்சியாளர்களுடன் சம்பந்தன் நெருக்கமாக செயற்பட்டிருந்தார். காலத்தை சரியாக கையாளாது விட்டால், இறுதியில் கூட்டமைப்பிற்கு ஏமாற்றமே மிஞ்சுமென்று பலரும் அப்போது சுட்டிக்காட்டியிருந்தனர். எனினும் சம்பந்தன் அவற்றை பொருட்படுத்தவில்லை. ரணில் தரப்போடு இணைந்து செயற்படுவதன் ஊடாக, புதிய அரசியல் யாப்பொன்றை கொண்டு வர முடியுமென்று சம்பந்தன் உறுதியாக நம்பினார்.

ஒரு விடயத்தை நம்பிச் செயற்படுவதில் தவறில்லை ஆனால் ஒரு விடயத்தை எந்தளவு நம்புவது நம்பலாம் என்பதில் நிதானம் இருக்க வேண்டியது அவசியம். ஆனால் அவ்வாறானதொரு நிதானப் போக்கு சம்பந்தனிடம் இருந்திருக்கவில்லை. இதன் காரணமாக, இறுதியில் சம்பந்தனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. எந்த ரணிலை காப்பாற்றுவதற்கு சம்பந்தன் – சுமந்திரன் ஒற்றைக் காலில் நின்றார்களோ இறுதியில் அந்த ரணில் கொழும்பின் அதிகாரத்திலிருந்தே தூக்கி வீசப்பட்டார். ஒரு தெளிவான திட்டத்தின் அடிப்படையில் செயற்படாமல் சில தனிநபர்கள் தொடர்பான நம்பிக்கையின் அடிப்படையிலேயே சம்பந்தன் ஆட்சி மாற்றத்தை கையாண்டிருந்தார். இதன் காரணமாகவே, ஆட்சி மாற்றத்தை தமிழ் மக்களின் நலனிலிருந்து கையாளுவதில் சம்பந்தன் தரப்பு தோல்வியடைந்தது.

இன்று அரசியலமைப்பிலுள்ள 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு உதவுமாறு இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதியிருக்கும் கூட்டமைப்பு ஆட்சி மாற்றத்தை பயன்படுத்தி இந்த விடயத்தை வெற்றிகரமாக கையாண்டிருக்கலாம். அதற்கு இந்தியாவின் உதவியை பெறுவதற்கான வாய்ப்புக்கள் அப்போது மிகவும் பிரகாசமாகவே இருந்தது. ஆனால் அருகிலிருந்த வாய்ப்பை கையாளாமல், கண்ணுக்குத் தெரியாத தேவதையை துரத்திப் பிடிக்கும் முயற்சியிலேயே சம்பந்தன் தரப்பு காலத்தை விரயம் செய்தது.

கோட்டபாய அரசாங்கமும் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசிவருகின்றது. தமிழ் மக்களுக்கென்று பிரத்தியே அரசியல் பிரச்சினைகளே இல்லையென்று வாதிடும் ராஜபக்ஷ தரப்பு, நிச்சயம் கூட்டமைப்பின் கருத்துக்களுக்கு செவிசாய்க்கப் போவதில்லை. ஒரு வேளை கூட்டமைப்பின் உதவியுடன் அரசியலமைப்பிலுள்ள 13வது திருத்தத்தை இல்லாமலாக்க அல்லது பலவீனப்படுத்தவும் அரசாங்கம் முயற்சிக்கலாம். அதற்காக, இனிப்பான வார்த்தைகளை பயன்படுத்தலாம். எனவே சம்பந்தன் இப்போதாவது ஏமாந்துவிடக் கூடாதென்று சிந்திப்பது வரவேற்கக் கூடிய ஒன்று தான். ஆனால் சொல்வது போல் ஏமாறாமல் இருப்பது தான் எல்லாவற்றையும் விடவும் முக்கியமானது. இன்று தமிழ் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்படும் சில செயற்பாடுகள் மறைமுகமாக ராஜபக்ஷக்களின் திட்டத்திற்கே பயன்படுகின்றது. உதாரணமாக அரசியலமைப்பில் இருக்கின்ற 13வது திருத்தச்சட்டத்தை நீக்கிவிட்டு 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்னும் அடிப்படையில் மேலும் இறுக்கமான ஒரு அரசியல் யாப்பை கொண்டுவருவதற்கான காய்களை, ராஜபக்ஷக்கள் மிகவும் நுட்பமாக நகர்த்திக் கொண்டிருக்கும் போது, அதற்கு பலம் சேர்க்கும் வகையில் தமிழ் சூழலிலும் 13எதிர்ப்பு முன் வைக்கப்படுகின்றது. தேர்தல் போட்டிக்காக சிலர் மேற்கொள்ளும் செயற்பாடுகள் இறுதியில் தமிழ் மக்களின் நிலைமையை மேலும் மோசமாக்கி விடலாம்.



# தமிழ்க்கட்சிகள் ஒன்றாக இந்தியாவை நாடியமை

## சாதாரண விடயமல்ல - சுதந்திரக்கட்சியின் உபதலைவர் தெரிவிப்பு



13ஆம் திருத்த சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் மற்றும் 1987 ஆம் ஆண்டு வாக்குறுதிகளை முழுமையாக நடைமுறைப்படுத்த தமிழ் அரசியல் கட்சிகள் வலியுறுத்தியுள்ளமை வழமை போன்ற செயற்பாடாக இருந்தாலும் இப்போது இதனை சாதாரணமாக கருத முடியாது என

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ரோஹன லக்ஸ்மன் பியதாச தெரிவித்துள்ளார். ஆகவே தமிழர் தரப்பின் பிரச்சினைகளை செவிமடுத்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் அரசியல் முரண்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமையில் தமிழர் தரப்பு இந்தியாவுடன் தனிப்பட்ட தொடர்புகளை ஏற்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது. 13ஆம் திருத்த சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் மற்றும் 1987 ஆம் ஆண்டு வாக்குறுதிகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தியுள்ளமை வழமை போன்ற செயற்பாடாக இருந்தாலும் இப்போது இதனை சாதாரணமாக கருத முடியாது.

இன்று சீனா ஜப்பான் ஒருபக்கம் பலமடைந்து வருகின்ற நிலையில் அமெரிக்க தலைமையில் இந்தியா அவுத்திரேலியா உள்ளிட்ட நாடுகளின் கூட்டணி உருவாக்கப்பட்டு வருகின்றது.

இந்த போட்டியில் இலங்கை சிக்கிக் கொண்டுள்ளது. இதில் தமிழர் தரப்பின் நகர்வுகள் அவதானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். வெள்வேறு நாடுகளுடன் நாம் பகுதி பகுதியாக இணைய நினைப்பது ஆரோக்கியமான விடயம் அல்ல. நாடாக ஒரே கொள்கையில் பயணிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதற்காக முதலில் தேசிய மட்டத்தில் சகல தரப்பையும் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும். தமிழர் தரப்பின் பிரச்சினைகளை செவிமடுத்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இனியும் தவறான கொள்கையில் அரசாங்கம் பயணித்தால் ஒட்டு மொத்த நாடுமே பாதாளத்தில் விழும்' எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

## அரசியல் தீர்வு இப்போது அவசியமில்லை - பஸில்

அரசியல் தீர்வு மாத்திரம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அல்ல. அதை விட அவர்களின் அத்தியாவசிய தேவைகளைத் தீர்ப்பதே முக்கியம். அவற்றைத் தீர்த்து வைப்பது தொடர்பிலேயே முதலில் நாம் கவனம் செலுத்துகின்றோம் என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

திறந்த மனதுடன் தமிழர் தரப்புடன் பேச்சு நடத்த ஜனாதிபதி தலைமையிலான அரசு தயார் நிலையில் உள்ளது. அந்தப் பேச்சு விரைவில் ஆரம்பிக்கப்படும். அரசியல் தீர்வு மாத்திரம் தமிழ் மக்களின் பிரச்சினை அல்ல. அதைவிட அவர்களின் அத்தியாவசிய தேவைகளே முக்கியம்.

எனவே முதலில் அத்தியாவசிய தேவைகளுக்கு அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். இது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் திட்டமாக உள்ளது. இவற்றுக்கு முதலில் தீர்வு கண்டால் அரசியல் பிரச்சினைக்கு இலகுவில் தீர்வு காண முடியும்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மிகவும் பொறு ப்புடன் செயற்பட வேண்டும். மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட வேண்டும். நாட்டைப் பிளவு படுத்தி இனவாத ரீதியில் செயற்பட அவர்கள் முற்படக்கூடாது. நாட்டை முன் நகர்த்தும் செயற்பாடுகளுக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அரசுக்குப்



பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# பொங்கலுக்கு முதல்நாள் நடந்த ஒரு பொங்கல்!

கடந்த தை பொங்கல் தினத்திற்கு முதல் நாள் யாழ்ப்பாணம் முத்தவெளியில் ஒரு வித்தியாசமான பொங்கல் ஒழுங்கு செய்யப்பட்டது. முத்த வெளியில் அமைந்திருக்கும் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகளுக்கான நினைவுத் தூபிகளுக்கு அருகில் ஒரு சிறைக் கூண்டு செயற்கையாக உருவாக்கப்பட்டு அதற்குள் வைத்து ஒரு பொங்கல் நடத்தப்பட்டது. அந்த நிகழ்வுக்கு தலைப்பு "விடுதலைப் பொங்கல்" என்பதாகும்.

அந்நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு தொகுதியினர் சிறைக்கைதிகளின் உடைகளோடு காணப்பட்டார்கள். அதை




ஒழுங்கு படுத்தியது அரசியல் கைதிகளின் விடுதலைக்கான "குரலற்றவர்களின் குரல்" என்ற அமைப்பாகும். இந்த அமைப்பு அதற்கு முதல் நாள் யாழ் ஊடக அமையத்தில் ஒரு ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்தது. தாம் இவ்வாறு ஒரு பொங்கலை வித்தியாசமாக நடத்த இருப்பதனை அறிவித்தது. அவ்வமைப்பு தமது கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு அரசியல் கட்சிகள் மற்றும் செயற்பாட்டாளர்கள், பொது மக்களின் ஆதரவை கேட்டிருந்தது.

எனினும் முத்த வெளியில் அந்த நிகழ்வில் மிகச்சில அரசியல்வாதிகளே பங்குபற்றியிருந்தார்கள். யாழ் நகரபிதா மணிவண்ணன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன், சிவாஜிலிங்கம், பார்த்திபன் உள்ளிட்ட மிகச் சில அரசியல்வாதிகளே அங்கே வந்திருந்தார்கள். தவிர சமயப் பெரியார்களும் வந்திருந்தார்கள். மிகக் கைக்கடக்கமான நபர்களோடு அந்த வித்தியாசமான பொங்கல் செய்யப்பட்டது. அது ஒரு கவன ஈர்ப்பு முயற்சி.

அரசியலில் கவனயீர்ப்பு போராட்டம் என்பது பெருமளவுக்கு ஒரு சடங்காக மாறி விட்டது. நகர மையத்தில் வீதியின் இரு மருங்கிலும் சுலோக அட்டைகளை தாங்கியபடி நிற்பதே நமது அரசியல்வாதிகளுக்கு கவன ஈர்ப்பாக தெரிகிறது. அது அடுத்த நாள் பத்திரிகைகளில் செய்தியாக வருவதற்கும் அப்பால் பெருமளவுக்கு பொது சனங்களின் கவனத்தை ஈர்ப்பதில்லை. எனவே அரசியல் கைதிகளுக்கான போராட்டத்தை வித்தியாசமான விதத்தில் இதற்கு முன் யாரும் செய்திராத விதத்தில் ஒழுங்குபடுத்தினால் அது பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்பதாக அமையும் என்று சிந்திக்கப்பட்டதன் விளைவே மேற்படி விடுதலைப் பொங்கல் ஆகும். எனினும் வழமையான கவனயீர்ப்பு போராட்டங்களைப் போலவே அந்நிகழ்வு அடுத்தநாள் ஊடகங்களில் செய்திகளாக வந்ததோடு சரி.

அதே சமயம் அதே நாளில் அதாவது பொங்கலுக்கு முதல்நாள் யாழ்ப்பாணத்தின் சிறிய மற்றும் பெரிய நகரங்கள் தோறும் சனங்கள் நிரம்பி வழிந்தார்கள். மிக மோசமான பொருளாதார நெருக்கடி நிலவும் ஒரு நாடா இது என்று கேட்குமளவுக்கு ஜனங்கள் நகரங்களில் பிதுங்கி வழிந்தார்கள். சனங்களுக்கு கொண்டாட்டங்கள் தேவையாக இருக்கின்றன.

அவர்கள் கொண்டாடும் மனநிலையோடு இருக்கிறார்கள். அது தவறல்ல. மக்கள் கொண்டாடட்டும். சந்தோஷமாக இருக்கட்டும். அதேநேரம் தங்களுக்காக போராட புறப்பட்டு சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளுக்காகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகவும் போராடும் தரப்புக்களோடு மக்கள் இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு அரசியல் கைதிகளுக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குமான போராட்டங்களை மக்கள் மயப்படுத்துவதற்கு வித்தியாசமான கவனயீர்ப்பு போராட்டங்கள் தேவை.

வழமையான பாரம்பரியமான கவனயீர்ப்பு போராட்டங்கள் இப்போதுள்ள அவசர உலகில் மக்களின் கவனத்தை ஈர்ப்பதாக இல்லை. இவ்வாறானதொரு பின்னணியில் மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு எதையாவது வித்தியாசமாக செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் தான் அரசியல் கைதிகளுக்காக போராடும் அமைப்பு அப்படி ஒரு பொங்கலை செய்தது.

இவ்வாறு வித்தியாசமாக கவனத்தை ஈர்க்கும் விதத்தில் ஒரு பொங்கலை ஒழுங்குபடுத்துமாறு அவர்களுக்கு கடந்த ஆண்டிலேயே ஆலோசனை கூறப்பட்டதாகத் தெரிகிறது. அரசியல் கைதிகளுக்காக கைதிகளும் விடுவிக்கப்பட்ட கைதிகளும் அவர்களின் உறவினர்களும் மட்டும் போராடும் ஒரு துர்ப்பாக்கியச் சூழலில் கைதிகளுக்கான போராட்டத்தை எப்படி மக்கள் மயப்படுத்துவது என்று சிந்தித்த செயற்பாட்டாளர்கள் சிலர் மேற்கண்ட ஆலோசனைகளை வழங்கியதாக தெரிய வருகிறது. அவ்வாறு ஆலோசனை வழங்கிய செயற்பாட்டாளர்கள் வேறு சில ஆலோசனைகளையும் கூறியதாக தெரிய வருகிறது.

அவற்றின்படி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு நாள் கைதிகளின் உடைகளோடும் சிறையில் கைதிகள் பயன்படுத்தும் சாப்பாட்டு கோப்பைகளோடும் நாடாளுமன்றத்துக்கு வெளியே ஒரு கவனயீர்ப்பு போராட்டத்தை செய்தால் என்ன என்று கேட்கப்பட்டது. அதோடு நீதிமன்றங்களில் அரசியல் செயற்பாட்டாளர்களாக காணப்படும் சட்டவாளர்களும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவான சட்டவாளர்களும் ஒரு நாள் கைதிகளின் உடையோடு நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டத்தை செய்யலாம் என்றும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இவ்வாறான வித்தியாசமான போராட்டங்களின் மூலம் தமிழ் மக்களின் கவனத்தையும் ஈர்க்கலாம், வெளி உலகத்தின் கவனத்தையும் ஈர்க்கலாம் என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

சமூகவலைத் தளங்களின் காலத்தில் பொது மக்களின் கவனத்தையும் வெளிநாடுகளின் கவனத்தையும் ஈர்ப்பதற்கு புதிதாக சிந்திக்க வேண்டியிருக்கிறது. அதிகம் கற்பனைத்திறன் தேவையாக இருக்கிறது. அதிர்ச்சியூட்டும் விதத்தில் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டியிருக்கிறது. இதற்கு உலகம் முழுவதும் உதாரணங்கள் உண்டு. இந்தியாவின் வடபகுதி தலைநகரங்களில் ஒன்று என்று நினைக்கிறேன்,

சரியாக ஞாபகம் இல்லை. நகரத்தின் பிரதான சாலைகளில் காணப்பட்ட பள்ளங்களை அடைக்குமாறு நகரசபை நிர்வாகத்திடம் தொடர்ச்சியாக வற்புறுத்தி சலிப்படைந்த ஒரு செயற்பாட்டாளர், நகர சபையின் கவனத்தை ஈர்ப்பதற்கு வித்தியாசமாக சிந்தித்தார். ஒரு மழை நாளில் சாலையின் பள்ளங்களில் தேங்கி நின்ற நீரில் மினுங்கும் வர்ண கலவைகளை கலந்து விட்டார். அதன் பின் அங்கே கடல்வாழ் உயிர்களின் பொம்மைகளை வைத்தார். இது ஊடகங்களின் கவனத்தையும் சம்பந்தப்பட்ட எல்லா தரப்புகளின் கவனத்தையும் உடனடியாக கவர்ந்தது. அடுத்த சில நாட்களுக்குள் வீதிகள் செப்பனிடப்பட்டன.

இதைப் போலவே இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த பெண்ணிய செயற்பாட்டாளர்கள், பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளான பெண்களின் ஆடைகளை பகிரங்கமாக கொடிகளில் தொங்கவிட்டு ஒரு கவனயீர்ப்பு போராட்டத்தை செய்தார்கள்.

இலங்கைத் தீவிலும் பெருந்தொற்று நோய் பரவத் தொடங்கியதும் இலங்கை அரசாங்கம் முஸ்லீம்களின் ஜனாசா அடக்க உரிமையை மறுத்தது. முஸ்லிம்களுக்கு ஆதரவாக கபன் துணிப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அது ஒரு வித்தியாசமான படைப்புத்திறன்மிக்க போராட்டம். அது அதன் அடுத்த கட்டத்துக்கு வளரவில்லை. அந்த வெற்றிடம் காரணமாகத் தான் முஸ்லிம்கள் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான ஆர்ப்பாட்டத்தில் தமது பங்களிப்பைச் செலுத்தினார்கள். மேற்கண்ட அனைத்து உதாரணங்களையும் தொகுத்துப் பார்த்தால் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. தகவல் யுகத்தில் பொது சனங்களின் கவனத்தையும் வெளிநாடுகளின் கவனத்தையும் ஈர்ப்பதற்கு கவனயீர்ப்பு போராட்டங்கள் வித்தியாசமாகவும் படைப்புத் திறனோடும் வடிவமைக்கப்பட வேண்டியிருக்கிறது. அவ்வாறு சிந்தித்து வடிவமைக்கப்பட்டதே விடுதலைப் பொங்கல் நிகழ்வு ஆகும். ஆனால் அது எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு தமிழ் மக்களின் கவனத்தையும் குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் கவனத்தை ஈர்க்கவில்லை. வழமையாக கவனயீர்ப்புப் போராட்டங்களிலும் ஏனைய போராட்டங்களிலும் பங்கு பற்றும் ஒரு தொகுதி அரசியல்வாதிகள் கூட அதில் காணப்படவில்லை.

அதை ஒழுங்கு படுத்திய குரலற்றவர்களின் குரல் அமைப்பிடம் போதிய வளங்களும் இல்லை, ஆட்களும் இல்லை. விடுதலைப் பொங்கலுக்கு முதல் நாள் அவர்கள் ஊடகச் சந்திப்புக்காக யாழ் ஊடக அமையத்திற்கு வந்திருந்த வேலை அங்கே ஒரு தமிழ் கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினரை கண்டிருக்கிறார்கள். அவரோடு தமது கவனயீர்ப்பு போராட்டம் தொடர்பாக உரையாட முற்பட்ட வேளை அவர் தங்களை பொருட்படுத்தவில்லை என்றும் மனம் நொந்து சொன்னார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு விடுவிக்கப்பட்ட சில அரசியல் கைதிகள் சம்பந்தரை சந்திக்கச் சென்ற போது அவரும் அப்படித்தான் நடந்து கொண்டார் என்பதை நினைவூட்டினார்கள். அச்சந்திப்பின் போது சம்பந்தர் தன்னை சந்திக்க வந்த முன்னாள் கைதிகளை முகம் கொடுத்து பார்க்காமல் ஒரு பேப்பரை வாசித்தபடி அவர்களோடு உரையாடினார். "திறப்பு என்னிடம் இல்லை" என்றும் கூறினார்.

ஆனால் இது போன்ற போராட்டங்களை புதிதாக சிந்திக்க வேண்டியதும் வழி நடத்த வேண்டியதும் தமிழ் செயற்பாட்டாளர்கள் (22ம் பக்கம் பார்க்க)

LAW OFFICE of THELMA WILLIAMS

Barrister, Solicitor, Notary Public, Commissioner (ON)
LL.B (Sri Lanka)

- FAMILY LAW:
  - Divorce
  - Separation
  - Property Division
- REAL ESTATE
- WILLS and ESTATES
- EMPLOYMENT LAW
  - ODSP, CPP disability
  - Wrongful Dismissal
  - Long-term Disability
- ADMINISTRATIVE LAW
- POWERS OF ATTORNEY, AFFIDAVITS, STATUTORY DECLARATIONS

- விவாகரத்து, சட்டப்படி பிரிதல், சொத்துக்களை பிரித்தல் போன்ற குடும்ப வழக்குகள்,
- காணி, வீடு வாங்குதல், விற்றல் தொடர்பான சட்டங்கள்
- உயில் மற்றும் எஸ்ரேற்ஸ்
- தொழில்சார் சட்டம்
- நிர்வாக சட்டம்
- சட்ட ஆவணங்களை உருவாக்குதல்

கனேடிய சட்டத்துறையில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்ட வல்லுனர்களின் நம்பிக்கையும், உத்தரவாதமுமான சேவை

Quality, Dependable Service with many years of Canadian legal experience.

TEL:647-777-8424
Suite #300, 10 Milner Business Court,
Scarborough, Ontario M1B 3C6
(just 2 minutes north of HWY 401)

PLEASE CALL FOR AN APPOINTMENT

# பகற்கனவு காண்கிறார் ஜனாதிபதி கோத்தபாயா!
# நீதி நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என்கிறார் சம்பந்தர்

நாட்டில் புரையோடிப் போயிருக்கும் நீண்டகால தேசிய இனப்பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண்பதை தவிர்த்து ஏனைய அனைத்து விடயங்களையும் கையாள முடியும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பகற்கனவு கண்டு கொண்டிருக்கின்றார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பகிரங்கமாக சாடியுள்ளார்.

அத்துடன் இனியும் ராஜபக்ஷக்களிடத்தில் நீதி, நியாயத்தினை எதிர்பார்க்க முடியாது என்று குறிப்பிட்ட அவர் உடனடியாக சர்வதேசத்தின் தலையீட்டைக் கோரும் செயற்பாடுகள் ஆரம்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமையினால் தான் போர் இடம் பெற்றது என்பதை ஜனாதிபதி மறந்து விடக்கூடாது எனக் குறிப்பிட்ட சம்பந்தன் போரின் காரணமாகவும் அக்காலத்தில் இடம்பெற்ற ஆயுதக் கொள்வனவுகளில் நடைபெற்ற ஊழல் மோசடிகள் காரணமாகவுமே நாடு மீள முடியாத பொருளாதார வீழ்க்குள் சென்றுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது அமர்வினை ஆரம்பித்து வைக்கும் முகமாக ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பிலும்மூபவ் அடுத்து வரும் காலத்தில் கூட்டமைப்பின் அரசியல் நகர்வுகள் குறித்தும் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

செல்வநாயகம் போன்ற தலைவர்கள் ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து இனக் குழுமத்தினரும் சமத்துவமாகவே விரும்பினார்கள். அதற்கான ஒப்பந்தத்தையும் செய்தார். ஆனால் அவர் உள்ளிட்ட தமிழ்த் தலைவர்கள் ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டு தென்னிலங்கை பெரும்பான்மைத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டார்கள். தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வை எட்டுவதற்கு பதிலாக அதனை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கினார்கள்.

இதன் விளைவாக இளைஞர்கள் ஆயுதங்களை கையிலெடுத்து தனிநாடு கோரி போராடினார்கள். இந்த ஆயுதப்போராட்டம் 2009ஆம் ஆண்டு வரையில் நீடித்தது. அந்த ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டு தற்போது 12ஆண்டுகள் கடந்தும் இனப்பிரச்சினைக்கான தீர்வுக் கோரிக்கையை நாம் அழுத்தமாக முன்வைத்து வருகின்றோம்.



இவற்றையெல்லாம் மறந்து விட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த நாட்டில் இனப்பிரச்சினை இல்லாதது போல் கருத்துக்களை வெளியிடுகின்றார். இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்று அவர் கருதுவது அவருடைய உரையில் மிகத் தெளிவாக உள்ளது.

அவ்விதமாக அவர் கருவாராக இருந்தால் அது அவர் காணும் பகற்கனவாகும். தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாது வேறு எந்த விடயங்களிலும் நிரந்தரமான தீர்வினை அடைய முடியாது. இது ஜனாதிபதிக்கு புரியவில்லை. அவர், தான் பெரும்பான்மை மக்களினதும் கடும்போக்கு பௌத்த தலைவர்களினதும் ஆதரவோடு ஆட்சிப் பீடம் ஏறியவர் என்பதால் அவர்களை மட்டும் திருப்திப்படுத்தினால் போதும் என்று கருதுகின்றார். அவர் அதனை பல இடங்களில் வெளிப்படுத்தியும் உள்ளார்.

ஆனால் அவர் ஒரு விடயத்தினை நினைவில் கொள்ள வேண்டும். அவர் (கோட்டாபய) உட்பட அவருடைய சகோதரர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மைத்திரிபால, ரணில் விக்கிரமசிங்க, சந்திரிகா, பிரேமதாஸ, என்று அனைத்து தலைவர்களும் தேசிய இனப்பிரச்சினை காணப்படுகின்றது என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

அதனால், அவர்கள் உள்ளூரிலும் சர்வதேச அரங்குகளிலும் சர்வதேச நாடுகளிலும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளார்கள்.

அவ்வாறிருக்கையில் ஜனாதிபதியாக இருக்கும் கோட்டாபய திடீரென்று விழித்தெழுந்தவர் போன்று எவ்வாறு இனப்பிரச்சினையே இல்லை என்று கூற முடியும்.

ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் ராஜபக்ஷக்கள் மீண்டும் பதவிக்கு வந்ததன் பின்னர் அவர்களின் போக்கு நாளுக்கு நாள் மோசமடைந்து செல்கின்றது. இனியும் இவர்களிடத்தில் நீதி, நியாயம் ஆகியவற்றை எதிர்பார்க்க முடியாது. எதிர்பார்க்கப்போவதுமில்லை.

ஆகவே தமிழ் மக்களின் ஆணை பெற்றவர்கள் என்ற அடிப்படையில் உடனடியாக சர்வதேசத்தின் தலையீட்டினை நாம் கோருவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டோம். சர்வதேச நாடுகள், அமைப்புக்கள், அனைத்தினதும் கவனத்திற்கு இந்த விடயத்தினை நகர்த்தவுள்ளோம்.

தற்போதைய நிலையில் நாடு பொருளாதார நிலையில் மீளமுடியாத நிலையில் உள்ளது. இதற்கு காரணம் போர். தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை வழங்கியிருந்தால் இந்த போரே மூண்டிருக்காது. இந்தப் போரினால் பல்வேறு இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றுக்கான பரிகாரங்கள் இன்னமும் வழங்கப்படவில்லை.

இதேநேரம் இந்தப் போருக்காக அரசாங்கம் கோடிக்கணக்கில் செலவழித்துள்ளது. இதானால் பொருளாதாரம் மெல்ல மெல்ல சரிந்து தற்போது மோசமடைந்துள்ளது. குறிப்பாக போர்க் காலத்தின் போது வரையறைகளின்றி ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

அச்சமயத்தில் ஊழல் மோசடிகள் இடம் பெற்றுள்ளன. அவை அனைத்தும் நாட்டின் பொருளாதாரத்தினை வெகுவாக தாக்கியுள்ளது. ஆகவே தேசியப் பிரச்சினைக்கு தீர்வினை வழங்காது நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியாது.

தென்னிலங்கை பெரும்பான்மை மக்களையும் பௌத்த தேரர்களையும் மையப்படுத்தி தமது விருப்பத்திற்கேற்றவாறாக ஆட்சியை முன் கொண்டு செல்வதானது எதிர்காலத்திற்கே பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் கூட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. ஆனால் இதுவரையில் நிறைவேற்றப்பட்ட 46.1 தீர்மானத்தில் எதனையுமே நடைமுறைப்படுத்தாது உள்ளது. இதனை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றார்.

# புலிகளின் தற்போதைய ஆயுதம் பிரச்சாரமும் பரப்புரையுமே!
# ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சரின் செயலாளர் கதறல்!

விடுதலைப்புலிகள் தற்போது தற்கொலை குண்டுகளை பயன்படுத்துவதில்லை பரப்புரையும் பிரச்சாரங்களும் நீதிமன்ற நடவடிக்கைகளுமே தற்போது அவர்களின் ஆயுதம் என தெரிவித்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயனத் கொலம்பகே எனினும் விடுதலைப்புலிகளின் ஈழக்கொள்கை மாறவில்லை என குறிப்பிட்டுள்ளார் பேட்டியொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஆனால் இலங்கையர்களை விசாரணை செய்வதற்கான வெளிநாட்டு பொறிமுறைகளை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் திட்டம் குறித்த அறிக்கை எவ்வாறானதாக காணப்படும் என்பது குறித்த உங்கள் எதிர்பார்ப்பு என்ன?

பதில்– நாங்கள் மனித உரிமைகளை மதிக்கின்றோம் மூன்று தசாப்தங்களாக பயங்கரவாதத்தை எதிர்த்து போரிட்ட போதிலும் பாரிய அளவிலான மனித உரிமை மீறல்களில் நாங்கள் ஈடுபடவில்லை என்பதே எங்கள் நிலைப்பாடு.

எப்பிஐ 2008இல் அறிவித்தபடி இலங்கை உலகின் மிகவும் ஈவிரக்கமற்ற பயங்கரவாத இயக்கத்தை எதிர்த்துப் போராடியது.

மீறல்கள் பிரச்சினைகள் இருந்தால் இலங்கை உள்நாட்டு பொறிமுறைகள் மூலம் இலங்கை அதற்கு தீர்வை காண்கின்றது விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாக உள்நாட்டில் தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்கள் வெளிநாடுகளில் செயற்படுகின்றனர். அவர்களது ஆயுதங்கள் தற்போது தற்கொலை குண்டுகளும் ஆட்டிலறிகளும் இல்லை மாறாக பரப்புரை நீதிமன்ற நடவடிக்கைகள் பிரச்சாரமே தற்போது அவர்களின் ஆயுதங்கள். . ஆனால் அவர்களின் கொள்கை மாறவில்லை – தமிழீழம் என்ற தனிநாடு.



குறிப்பிடத்தக்க அளவு புலம் பெயர் தமிழர்கள் விடுதலைப்புலிகளின் கொள்கைகளை முன்னெடுப்பதால் வாக்குகளை பெறுவதற்காக அவர்களிற்கு ஆதரவளிக்கும் தீர்மானங்களை எடுக்கும் நிலையில் உள்ளவர்களின் ஆதரவை அவர்களால் பெற முடிகின்றது.

மனித உரிமைகளை சில குழுக்களும் நாடுகளும் துஸ்பிரயோகம் செய்கின்றன என நாங்கள் கருதுகின்றோம் நாங்கள் கொள்கைகளை ஐநாவின் பிரகடனத்தை ஐநாவை நாங்கள் மதிக்கின்றோம்.

ஆனால் இலங்கையர்களை விசாரணை செய்வதற்கான வெளிநாட்டு பொறிமுறைகளை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. மனித உரிமை ஆணையாளர் தன்னிடம் 120.000 ஆதாரங்கள் உள்ளன என தெரிவிக்கின்றார். அந்த ஆதாரங்கள் என்ன? ஆதாரங்கள் என்னவென தெரிவிக்காமல் குற்றம் சாட்டுவது நீதியா?

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் 16 உறுப்பினர்களிற்கு ஜனாதிபதியின் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஏனையவர்களை விடுதலை செய்வது குறித்து ஆராய்வதற்கான குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளார். அதன் பின்னர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த மேலும் 13 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அப்புத்துரை சின்னம்மா

தைபிட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் மானிப்பாயை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அப்புத்துரை சின்னம்மா அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 26 பெப்ரவரி 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி அப்புத்துரை சின்னம்மா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# ஈழத்தமிழர் தேசத்தின் தலைமைத்துவம் தேர்தல் அரசியல் கட்சிகளுக்கு அப்பாலானது

இனவழிப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அரசான சிறீலங்கா எனப்படும் இலங்கையானது, அரசுகளுக்கான உலக ஒழுங்கு தனக்குச் சாதகமாகயிருக்கும் போக்கையும், புவிசார் சமனமாக்கல் ஆட்டத்துக்கு ஏதுவாகத் தனக்கமைந்திருக்கும் கேந்திர முக்கியத்துவத்தையும் ஒரு சேர இணைத்துப் பயன்படுத்தும் வாய்ப்பை ஓர் ஆளும் அரச தரப்பாகப் பெற்றிருக்கிறது.

இனவழிப்புப் போரை நடாத்தியது போலப் பொருளாதார நெருக்கடியையும் அரசுகளுக்கான உலக ஒழுங்கையும் கேந்திரச் சமனமாக்கல் ஆட்டத்தையும் பயன்படுத்தி மீண்டும் எதிர்கொள்ளலாம் என்று அது முனைகிறது.

ஆனால் தனக்கு ஆதரவாக உலக ஒழுங்கில் ஓர் அரசையும் கொண்டிராத ஈழத்தமிழர் தேசமோ பின்-முள்ளிவாய்க்காற் காலத்தில், தனது மெய் நடப்பு அரசுக்கான நாடுகடந்த மாற்றீடும் சரியாக அமையாத நிலையில், ஒரு தரப்பாக இல்லாது, பற் பல பகடைக் காய்களாகப் பிளக்கப்பட்டும், தாமாகப் பிளவுற்றும், தீவின் ஆட்சித் தரப்பாலும் வெளிச் சக்திகளாலும், தேவைக்கேற்ப இணைத்தும், வேண்டிய போது தனித்தனியாகவும் ஆட்டுவிக்கப்படுகிறது.

இதைப் போலவே, ஈழத்தமிழர் கருத்துருவாக்கிகளிற் பலரும் சோரம் போயுள்ளனர், அல்லது அறிதிறன் அதிர்ச்சிக்கு உள்ளாகி (intellectual trauma) நிலை தடுமாறியுள்ளனர். இவ்விரண்டும் கலந்த நிலைக்குள்ளும் சிலர் ஆட்பட்டிருக்கக்கூடும். இவர்களை



ஆழமாக ஆராயப் புறப்பட்டால் ஈற்றில் நாமும் அதே நோய்க்குப் பலியாக நேரிடும்.

ஈழத்தமிழரின் தலைமை ஒரு கூட்டுப் பொறி முறையாகவே உருவாக்கப்படலாம். அதைச் செதுக்குவதில் பூச்சிய நிலையில் இருந்தேனும் எந்த விதத்திலும் கட்டற்றுத் தனித்தியங்கும் (independent) புள்ளியிலிருந்து அது ஆரம்பிக்கப்பட வேண்டும். வெறுமனே கருத்துகளை எழுதிச் சிந்திக் கொண்டிருந்தும், புலித்தோல் போர்த்த பசுக்களின் கன்றுகளுக்குப் பட்டறை நடாத்திக் கொண்டிருந்தும், கற்பனைகளிற் சஞ்சரிப்பதில் பலன் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஈழத் தமிழர் தேசத்தின் பொறுப்புக் கூறலுடனான தலைமைக்குரியவர்களாகத் தற்போது தாயகத்துத் தேர்தல் அரசியலாரும், அவர்களது கட்சிகளும், அவற்றின் கூட்டுகளும் வெளிப் பார்வைக்குத் தென்படக்கூடும். ஆனால் எது நிஜம் எது மாயை என்பது மிக விரைவில் வெளிப் பார்வைக்குரிய கண்களுக்கு உணர்த்தப்படவேண்டும்.

தேர்தல் அரசியலில் சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் விக்னேஸ்வரனுக்கும் கஜேந்திரகுமாருக்கும் வேறுபாடிருப்பதாகக் கூறிக் கொள்வார்கள். அவை சிறிய சிறிய வேறுபாடுகளே. தேர்தற் போட்டிக்குத் தேவையானவே மட்டுமே. ஈழத்தமிழர் தேசத்திற்கான அடுத்த கட்ட நகர்வுக்கு அவை அனைத்தும் இசைவுடையவையாக



(compatible) இல்லாது போய் விட்டன. அவர்கள் அனைவரும் ஈழத் தமிழர் தேசத்தின் மக்களாணை பெற்ற அரசியல் வேணவாவுக்கு எதிராக உறுதிமொழி மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கும் தேர்தல் அரசியலார் என்பதையும் இங்கு நினைவிற் கொள்ள வேண்டும்.

சிறிலங்கா அரசின் அரசியலமைப்புக்கு விசுவாச மாகவும், ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கும் எதிராக இருப்போம் என்று 157 ஆ (7) ஆம் உறுப்புரைக்கும் 161 (ஈ) (iii) ஆம் உறுப்புரைக்கும் கீழ் உறுதிமொழியெடுக்க வேண்டிய நிலையில் உள்ள அரசியலாரே அவர்கள் அனைவரும்.

அவர்களுக்குள் நல்லவர்கள், வல்லவர்கள், கெட்டவர்கள் எனச் சில வகையினர் இருக்கலாமே அன்றி, அவர்களில் எவரும் தலைமைக்குரிய ஈழத் தமிழ்த் தேசியப் புனிதர்கள் அல்லர். அவர்களை விடவும் திறமைசாலியாக இருந்து, இறுதியில் அவர்களைப் போலவே உறுதி மொழியெடுத்தவர் தான் அமிர்தலிங்கம் என்பதையும் இங்கு மறந்து விடல் ஆகாது.

அந்த அடிப்படையில் அவர்கள் அனைவரும் ஒரே தட்டிலேயே வைத்துப் பார்க்கப்பட வேண்டியவர்கள். அதிலே ஏதும் ஐயமிருப்பின் அவர்கள் அனைவரும் எடுத்துள்ள உறுதிமொழியை இத்தருணத்தில் அசை போட்டுக் கொள்வது பொருத்தமானது.

ஆனால், தேர்தல் அரசியலாரை விடவும், கருத்துருவாக்கிகளுக்கு, அதுவும் ஆக்கிரமிப்பு அரசின் இறைமை எல்லைக்கும் ஆறாம் சட்டத் திருத்தத்தின் வீச்சுக்கும் அப்பாலான அரசியல் வெளிகளில் வதியும் கருத்துருவாக்கிகளுக்கு, தாயகத்துத் தேர்தல் அரசியலாரை விடவும் மக்களை வழிநடத்துவதில் அதிக பொறுப்பு உண்டு.

ஆனால், அவர்களுக்குள்ளும் தாயகத்தில் இருக்கும் தேர்தல் அரசியலாரை மையப்படுத்தி, அதே போக்கோடு இழுபட்டுச் சென்ற சில கருத்துருவாக்கிகளை அண்மையிற் பகிரங்கமாகவே காணமுடிந்தது.

அதுவும் குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளோடும், தேசிய விடுதலைப் போராட்டத்தோடும் இணைந்து பயணித்து, ஒன்றாய் விருந்தோம்பி, இருந்து எழும்பியவர்களாகத் தம்மை வெளியில் அடையாளம் காட்டிக் கொள்ளுபவர்கள், அதே தேர்தல் அரசியலாரின் நிலையை எடுத்தார்கள். அதை இராஜரீகம்' அல்லது இராஜ தந்திரம்' என்று இந்தியப் பாணியில் வெளிப்படுத்தவும் அவர்கள் தயங்கவில்லை.

இந்தியப் பிரதமர் மோடிக்கு அனுப்பிய கடிதப் படலம் நடந்தேறிய போது தங்களை அடையாளம் காட்டிக் கொண்டவர்களுள் தமிழ்நாட்டில் வதியும் மு. திருநாவுக்கரசு முதன்மையானவர். தொலைந்து போன கருத்துருவாக்கிகள் என்று அவர்கள் அனைவரையும் கருதிப் பயணிக்க முதல், ஒரு கணம் அவர்களை விளங்கிக் கொள்வது, குறைந்த பட்சத் தேவையாகிறது.

அவர்கள் ஒவ்வொருவரின் மனதில், அல்லது ஆழ்மனதில், பிரபாகரன் விட்ட தவறு உயிராயுதம், அதை விஞ்சியது எனது அறிவாயுதம்' என்ற சிந்தனை குடி கொண்டிருப்பதைப் பல வருடங்களுக்கு முன்னரே காண முடிந்தது.

அந்தச் சிந்தனையால் உந்தப்பட்ட வேகத்தில் தானோ என்னவோ, சுமந்திரனை விடவும் ஒப்பீட்டளவிற் குறைந்த ஒரு நிலைப்பாட்டை ஆரம்பப் புள்ளியாக நிறைவேற்றுமாறு இலங்கைக்கு இந்தியா ஊடாக அழுத்தம் கொடுப்பது அவசியம் என்று சீனாவுக்கு எதிர் நிலை ஏடுத்து இந்தியாவை ஈழத்தமிழர் வழிக்குக் கொண்டு வர நினைத்து பதற்றப்பட்டு வாதிட்டார்கள்.

காட்டப்பட்ட சீனப் பூச்சாண்டியை இலங்கை அரசே இந்திய அரசுக்கு எதிரான சமனமாக்கல் ஆட்டத்திற்குப் பயன்படுத்தியது என்பதைப் புரிந்து கொள்ளும் அறிவாற்றலை அவர்களின் ஆழ்மனக் கோளாறு பாதித்திருக்க வேண்டும்.

காலம் வந்த போது தலையை வெளியே நீட்டிய ஆமைகளாகவும், ஊளையிடும் நரிகளாகவும், பசுத்தோல் போர்த்த புலிகளாகவும் தங்களைப் பலவிதமாக அண்மைய கிழமைகளில் அவர்கள் வெளிக்காட்டிய விதமே அலாதியானது.

இருப்பினும், விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில கருத்துருவாக்கிகள், அணி சேராதவர்களாயும் சுதந்திரமாகச் சிந்திப்போராயும் தீவுக்குள்ளும் வெளியிலும் எஞ்சியுள்ளார்கள் என்பது இங்கு கவனத்தோடு பாராட்டுதற்குரியது.

அடுத்த படியாக, ஊடகத்துறையினரிற் சிலர் குறித்த எச்சரிக்கை ஈழத்தமிழ்த் தேசியப் பரப்புக்குத் தேவைப்படுகிறது. ஈழத்தமிழர் தேசிய ஊடகங்களாகத்' தாமும் பயணிப்பதாக ஒரு புறத்தில் மாயத் தோற்றம் காட்டி, தமது பண பலத்தால் பார்வையாளர்களைக் கட்டிப் போட்டு, மறுபுறத்தில் இலங்கை மற்றும் இந்திய அரசுகளோடு உரிமம் பெறும் ஒப்பந்தங்களில் ஈடுபட்டிருக்கும் 'அட்டை முதலாளிகள்' தமது நிதியை மூலதனமாக்கி, ஊளையிடும் நரிகளுக்கும், பசுத்தோல் போர்த்த புலிகளுக்கும் ஊடக வெளியைத் திறந்து விட்டுத் தமது சேவை யாருக்கு என்பதைக் கமுக்கமாக வெளிப்படுத்திவருகிறார்கள்.

அவர்களின் திரைகளில் பெரும்பான்மையாகப் பசுத்தோல் போர்த்த புலிகள் தோன்றி மறைவதைக் காணலாம். புலிகளின் 'அரசியற் துறை' என்ற பெயரிற் கூட ஒன்று அங்கே அண்மையில் அரங்கேறியது.

மாற்றுக் கருத்துக்கு இடமளிப்பதாகவும் தம் மீது ஐயம் ஏற்படா திருப்பதற்காகவும் இந்தவித ஊடகங்களில் ஒரு சில சுதந்திரச் சிந்தனையாளர், ஆங்காங்கே சேர்த்துக் கொள்ளப்படுவர். எனினும், இந்த அட்டை முதலாளிகளும் இம்முறை, முறையாகவே மாட்டிக் கொண்டார்கள்.

அடா, இவர் போன்றோரை எல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை எவ்வாறு கையாண்டிருக்கும் என்பதை (கொலைத் தண்டனைகளை இங்கு குறிப்பிடவில்லை) ஏற்கனவே அறிந்திருந்த போதும், ஒரு தற்துணிபுக்காக எழுத்து ஆதாரங்களைத் தேடிய வேளையில், அறமரபில் பயணித்த யோகரட்ணம் யோகி அவர்கள் 1992 இல் எழுதிய, 'ஆழ வேரோடிய ஆலமரமும் அசைக்க நினைத்த புயல்களும்' என்ற ஒரு கட்டுரை எம் கண்களிற் பட்டது.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் 1992 இல் யாழ்ப்பாணத்தில் நடாத்திய முத்தமிழ் விழாவின் மலரில்



122 ஆம் பக்கத்தில் அக்கட்டுரை வெளியாகியிருந்தது.

யோகியைப் போலவே, க.வே. பாலகுமார் அவர்களும் முள்ளிவாய்க்கால் வரை சொல்லிச் சென்ற செய்திகளை அறிந்தும் அறியாதவர் போல, மேய்ப்பர்கள்' என்று சிலர் வந்தால் மட்டும் மேய்க்கப்படக் கூடியவர்களாக, பசுத் தோல் போர்த்த புலிகளாக, ஈழத்தமிழர் மத்தியில் தற்போது தலைகாட்டி வரும் புலம்பெயர் 'அனைத்துலக' மற்றும் 'தலைமைச் செயலகப்' பசுக்களும், ஆடுகளும், இன்னும் என்ன பெயரை எல்லாம் விட்டு வைக்காமற் பழுதடையச் செய்யலாம் என்று சிந்திக்கும் நரிகளும், ஆமைகளும் யோகியின் இக்கட்டுரையை மீண்டும் ஒரு முறை வாசிக்காவிடினும், அதைக் கேட்டாவது தம்மை யாரென உணர்ந்து கொள்ள வேண்டும். இதற்காக, அதை ஒலி வடிவிலும், அதேவேளை அதன் மூலத்தன்மை சிதறாது பார்த்து அவைகள் உறுதிப்படுத்திக் கொள்ளும் விதத்திலும், எழுத்து ஆதாரத்தோடு சேர்த்து, தமிழ்நெற் இங்கு மீளுருவாக்கியுள்ளது.

இந்திய அரசு குறித்தும் தேசத் துரோக (18ம் பக்கம் பார்க்க)

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வு க்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

22 ஜனவரி 2022 முதல் 28 ஜனவரி 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் திரு அப்பாக்குட்டி நல்லையா

யாழ்ப்பாணம் கட்டுவனைச் சேர்ந்த திரு அப்பாக்குட்டி நல்லையா அவர்களது 35வது ஆண்டு நினைவு நாள் 26 ஜனவரி 2022 புதன்கிழமை யாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு அப்பாக்குட்டி நல்லையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுபேந்திரன் (ஸ்ரீ) முத்தையா

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியல், ரொறன்ரோ ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சுபேந்திரன் முத்தையா அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 29 ஜனவரி 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சுபேந்திரன் முத்தையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது 31ம் நாள் நினைவு நாள் 26 ஜனவரி 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 14வது ஆண்டு நாள் நினைவு நாள் 29 ஜனவரி 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பிரதீப் பத்மநாதன்

யாழ்.பிறவுன் றோட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பிரதீப் பத்மநாதன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 28 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பிரதீப் பத்மநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 31ம்நாள் நினைஞ்சலி



### திருமதி மங்கையற்கரசி குணரெத்தினம்

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த ஆச்சி என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி மங்கையற்கரசி குணரெத்தினம் அவர்களது 31ம் நாள் நினைவு நாள் 28 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் திருமதி மங்கையற்கரசி குணரெத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வேலாயுதம் கந்தசாமி

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வேலாயுதம் கந்தசாமி அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 02 பெப்ரவரி 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு வேலாயுதம் கந்தசாமி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

**மின்னஞ்சல் முகவரி:- Eelanadu.ca**

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




22 ஜனவரி 2022 சனிக்கிழமை சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் தும்பலையை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களது 86வது பிறந்த நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது பிறந்த நாள் நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




23 ஜனவரி 2022 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த யாழ்.மத்திய கபே உரிமையாளர் திரு ஆறுமுகம் செல்லத்துரை அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




23 ஜனவரி 2022 ஞாயிற்றுக்கிழமை **Exeuitive woodwork Ltd** ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




24 ஜனவரி 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தர்மசீலன் அர்ச்சனா தம்பதிகள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




21 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை மாதகலைச் சேர்ந்த திரு கேதீஸ்வரன் துரைசிங்கம் அவர்களது 30வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக 25 ஜனவரி 2022 அன்று அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




26 ஜனவரி 2022 புதன்கிழமை உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




26 ஜனவரி 2022 புதன்கிழமை யாழ்.கட்டுவனைச் சேர்ந்த திரு அப்பாக்குட்டி நல்லையா அவர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




26 ஜனவரி 2022 புதன்கிழமை தையிட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் மானிப்பாயை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அப்புத்துரை சின்னம்மா அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




27 ஜனவரி 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி வசந்தகுமார் இராஜவினோதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் சஞ்சயன் வசந்தகுமாரின் 21வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சஞ்சயன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

## 26வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வி சாருஜா காசிநாதன்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி காசிநாதன் யோகேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி சாருஜாவின் 26வது பிறந்த நன்நாள் 28 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் செல்வி சாருஜாவும் அவரது பெற்றோர்களும் சகோதரங்களும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள். அகவை இருபத்தாறு காணும் செல்வி சாருஜா நோய் நொடியின்றி சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!




28 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி சாருஜா காசிநாதன் அவர்களது 26வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி சாருஜா தனது பெற்றோர்கள், சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.





28 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை யாழ்.பிறவுன் றோட்டைப் பிறப்பிடமாகவும் ஸ்காபரோ கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பிரதீப் பத்மநாதன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




18 ஜனவரி 2022 செவ்வாய்க்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானாம்பிகை ஸ்ரீபதி அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




28 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி மங்கையற்கரசி (ஆச்சி) குணரெத்தினம் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

31 ஜனவரி 2022 திங்கட்கிழமை
இரவு 7.00 மணிக்கு
அபிராமிப் பட்டர் விழா
உபயம்:- இராஜமுகுந்தன் சதுர்ஜன்

02 பெப்ரவரி 2022 புதன்கிழமை
(10வது வருடம்)
காலை 10.00 மணிக்கு
1008 சங்காபிஷேகம்

02 பெப்ரவரி 2022 புதன்கிழமை
(10வது வருடம்)
இரவு 7.00 மணிக்கு
திருவூஞ்சல் மணவாளக்கோலம்

உபயம்:- வெ.சதானந்தவடிவேல்
குடும்பம் சி.லிங்கராஜா குடும்பம்
சா.முரளி குடும்பம்

இரவுப் பூஜை மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்

இவ்வண்ணம்:- ஆலய தர்மகர்த்தா சபையினர்

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

# Happy Tamil Heritage Month & New Year

## இனிய தமிழ் மரபுத் திங்கள் மற்றும் புத்தாண்டு வாழ்த்துகள்



**Steven Del Duca**
Leader of the
Ontario Liberal Party



**Anita Anandarajan**
OLP Candidate for
Scarborough North



LIBERAL ONTARIO

Authorized by the CFO for the Scarborough North PLA



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community


OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# 79வது பிறந்த நாள் நினைவுகள்






நெடுந்தீவைப் பூர்வீகமாகவும்
இலக்கம் 9 மார்டின் லேனை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த
முன்னாள் பாதுகாப்பு சேவை அதிகாரியும்
மார்டின் றோட் சுகலெட்சுமி ஸ்ரோர் உரிமையாளருமான

## அமரர் உயர்திரு
## கந்தையா பத்மநாதன் அவர்கள்

அப்பா!
தை இருபத்தியாறு - உங்கள்
எழுபத்தொன்பதாவது பிறந்த நாள் - உங்கள்
அரவணைப்பில் நாம் இருந்தோம்!- எங்கள்
அரவணைப்பில் நீங்கள் வாழ எங்களுக்கு
காலம் கை கொடுக்கவில்லையே அப்பா!
முப்பொழுதும் எப்பொழுதும்
உங்கள் நினைவுகள்
நீங்காது துடிக்கின்றோம்
எங்கள் பாசத்தை உங்கள் காலடியில்
நினைவுப் பூக்களாய் சமர்ப்பிக்கின்றோம்
நயினை அம்பாள் திருவடியில்
நிம்மதியாய் - நித்தியமாய் வீற்றிருந்து
எங்களை ஆசீர்வதிப்பீர்களாக!

என்றும் நீங்கா நினைவுகளுடன்
துணைவியார், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
தகவல்: பட்டு, ரங்கன் (மகன்மார்)
நியூ ரங்கனாஸ் நகை மாடம், நியூ ரங்கனாஸ் வீடு கட்டுமான நிறுவனம்
647 702 2159 / 647 947 2864

# கோரிக்கைகளை முன் வைப்பது மட்டும் அரசியல் அல்ல



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –

நாட்டில் செயற்கை உர இறக்குமதி நிறுத்தப்பட்டதால் பூக்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் திருமணம் பிறந்தநாள் போன்ற சுபகாரியங்களில் வழங்குவதற்கு பூச்செண்டுகளுக்கு தட்டுப்பாடு. மரண வீடுகளில் வைப்பதற்கு மலர் வளையங்களுக்கும் தட்டுப்பாடு. அதே சமயம் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை இயங்குவது நிறுத்தப்பட்டதால் மெழுகுதிரிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு இருப்பதாக வியாபாரிகள் தெரிவிக்கிறார்கள். சபுகஸ்கண்ட எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் உப உற்பத்திகளில் ஒன்றாகவே மெழுகுதிரி வார்க்கப்படுவதாகவும் இப்பொழுது அதற்கும் தட்டுப்பாடு வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நீர் நிலைகளில் நீர் குறைவடைந்துள்ளமை ஆகிய காரணங்களினால் 4 மணி நேர மின் வெட்டை எதிர்பார்ப்பதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் எதிர்வு கூறுகின்றது. எனவே மின்வெட்டு நேரத்தில் பயன்படுத்துவதற்கு மெழுகுதிரிகளுக்கும் தட்டுப்பாடு வரும் போலிருக்கிறது. இப்படியாக பூச்செண்டுகளுக்கும் மலர்வளையங்களுக்கும் மெழுகுதிரிகளுக்கும் தட்டுப்பாடான ஓர் அரசியல் பொருளாதாரச் சூழலில் தை பிறந்திருக்கிறது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். ஆனால் தை பிறந்த பொழுது நாட்டில் பெரும்பாலான வழிகள் மூடப்பட்டிருப்பதாகவே தெரிகிறது. தை பிறந்த கையோடு இந்தியா ஒரு தொகுதி பணத்தை கடனாக வழங்கியிருக்கிறது. அது அரசாங்கத்துக்கு இரண்டு மாதங்களுக்காவது மூச்சு விடும் அவகாசத்தை கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா மேலும் கடன் உதவிகளை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வாரம் தமிழ் கட்சிகள் கூட்டாக ஒரு ஆவணத்தை தயாரித்து அதனை இந்திய தூதரகத்திடம் கையளிக்க விருந்தன. ஆனால் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் அவசர அவசரமாக டெல்லிக்கு போக வேண்டி இருந்த படியால் ஆவணம் கையளிக்கப்படவில்லை. அது பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டது.

தமிழ் கட்சிகளின் கடிதத்தை பெற்றுக் கொள்ளாமல் இலங்கைக்கான இந்திய தூதுவர் ஏன் டெல்லிக்கு பறந்தார் என்று பல்வேறு விதமான ஊகங்கள் எழும்பின. டெல்லிக்கு போன தூதுவர் திரும்பி வந்த கையோடு மத்திய வங்கியின் ஆளுநரைச் சந்தித்து இந்தியாவின் நிதி உதவியை உறுதிப்படுத்தியுள்ளார். ஆயின் அந்த நிதிஉதவியை அவசரமாக பெற்றுக் கொடுப்பதற்காகத் தான் அவர் புதுடில்லிக்கு பறந்தாரா? என்ற ஒரு ஊகமும் உண்டு.

ஏனெனில் நாடு அதன் படுகடனில் ஒரு பகுதியை அடைப்பதற்கு கடந்த 18ஆம் திகதி வரையிலும் ஒரு காலக்கெடு இருந்தது. அக்காலக் கெடுவுக்குள் இலங்கை அரசாங்கத்திற்கு சீனா அல்லாத வேறு எந்த நாடாவது உதவி வழங்க தவறினால் அரசாங்கம் சீனாவை சரணடைவதே தவிர வேறு வழி கிடையாது என்றிருந்த ஒரு நிலையில் அவ்வாறு அரசாங்கம் சீனாவிடம் உதவி கேட்டுப் போவதை தடுக்கும் நோக்கத்தோடு இந்திய தூதுவர் அவசர அவசரமாக டெல்லி சென்று ஒரு தொகுதி கடனை கொழும்புக்கு வழங்கியதாகவும் ஊகிக்கப்படுகிறது.

அதே சமயம் தமிழ் கட்சிகள் கூட்டாக தயாரித்த ஆவணத்தை பெற்றுக்கொள்வதில் காட்டிய அக்கறையை விடவும் கொழும்பின் கடனை அடைப்பதில் தான் புதுடில்லி அதிகம் கவனம் செலுத்தியது என்றும் ஒரு விமர்சனம் உண்டு. தமிழ் கட்சிகளின் கடிதத்தை கொடுப்பதற்கு கால வரையறை இல்லை. ஆனால் இலங்கை அரசாங்கம் அடைக்க வேண்டிய கடன்களுக்கு ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு காலக்கெடு இருந்தது. இரண்டையும் ஒப்பிட்டு வியாக்கியானம் செய்ய முடியாது. மேலும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார் உறவு உண்டு அந்த உறவின் பிரகாரம் ஓர் அரசு இன்னொரு அரசைப் பாதுகாக்கும்.



இந்தியாவுக்கு ஆவணத்தைத் தயாரித்த கட்சிகளை விமர்சிக்கும் தரப்புகள் இந்த விடயத்தை வேறுவிதமாக வியாக்கியானம் செய்கின்றன. தமிழ் கட்சிகள் தயாரித்த ஆவணத்தை வைத்து இந்தியா இலங்கையுடனான தனது பேரத்தை அதிகப்படுத்தி விட்டது என்றும் அண்மையில் திருகோணமலையில் உள்ள எண்ணை குதங்களில் ஒரு பகுதி தொடர்பான உடன்படிக்கைக்கு அதுவும் ஒரு காரணம் என்றும் கூறப்படுகிறது. அதாவது தமிழ் கட்சிகள் இந்தியாவை நோக்கி செல்வதை இந்தியா தனக்கு சாதகமாக கையாண்டு தன்னுடைய காரியங்களை முடித்துக் கொள்கிறது என்பதே அந்த குற்றச் சாட்டாகும்.

ஏற்கனவே இந்திய இலங்கை உடன்படிக்கை அவ்வாறுதான் செய்யப்பட்டது. அமெரிக்க சார்பு ஜெயவர்த்தனவை வழிக்குக் கொண்டு வருவதற்காக சோவியத் சார்பு இந்தியா தமிழ் இயக்கங்களுக்கு பயிற்சியையும் ஆயுதங்களையும் பின்தள வசதிகளையும் வழங்கியது. அதன் மூலம் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி கொழும்பை வழிக்கு கொண்டு வந்து இலங்கை தீவில் இந்தியா என்றென்றும் தனது மேலாதிக்கத்தை சட்டப்படி நிலைநிறுத்த தேவையான ஒரு ஆவணத்தை அது தான் இந்திய இலங்கை உடன்படிக்கையை எழுதிக் கொண்டு விட்டது. எனவே இந்தியா எப்பொழுதும் கொழும்பைப் பணிய வைப்பதற்கான அழுத்த பிரயோக சக்தியாகத்தான், கருவியாகத்தான் தமிழ் மக்களை கையாண்டு வருகிறது என்றும் அவர்கள் விமர்சிக்கிறார்கள்.

இந்த இடத்தில் இந்தியாவுக்கு ஒரு பொது ஆவணத்தை வழங்கிய கட்சிகள் தமது செயற்பாடுகளின் மூலம் நிரூபிக்க வேண்டிய ஒரு அம்சம் இருக்கிறது. அது என்னவெனில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இக்கட்சிகள் மீது சுமத்தும் குற்றச்சாட்டில் உண்மைகள் இல்லை என்பதனை செயல் மூலம் நிரூபிப்பது தான். தமிழ் தேசிய மக்கள் முன்னணி மேற்படி ஆவணத்தை தயாரித்த கட்சிகளை இந்தியாவின் கைக்கூலிகள் என்றும் இந்தியாவின் நிகழ்ச்சி நிரலின்படி இயங்குபவை என்றும் குற்றஞ் சாட்டியுள்ளது. இந்நிலையில் இந்தியா சொல்லித் தான் அப்படி ஓர் ஆவணத்தை தாங்கள் தயாரிக்கவில்லை என்பதனை நிரூபிக்க வேண்டிய ஒரு கட்டாயம் மேற்படி கட்சிகளுக்கு உண்டு. அதோடு தாங்கள் தயாரித்த ஆவணம் இனப் பிரச்சினைக்கான தீர்வை ஒற்றையாட்சிக்குள் பெட்டி கட்டி விடவில்லை என்பதையும் நிரூபிப்பதற்காக உழைக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் மேற்படி கட்சிகளுக்கு உண்டு.

கிடைக்கும் தகவல்களின்படி மேற்படி கட்சிகள் மேலும் சில ஆவணங்களை தயாரிக்க இருப்பதாக தெரிகிறது. அதன்படி பயங்கரவாத தடைச்சட்டத்தை அகற்ற வேண்டும் என்று கேட்டு ஒரு கூட்டுக் கோரிக்கையை அவர்கள் வரைந்து வருவதாக தெரிகிறது. குறிப்பாக அடுத்த ஜெனிவா கூட்டத்தொடர் ஏறக்குறைய ஒரு மாதத்தில் தொடங்கப்போகிறது. இவ்வாறான ஒரு காலப் பின்னணியில் அப்படி ஒரு கோரிக்கையை முன்வைப்பது அவசியம் என்றும் மேற்படி கட்சிகள் கருதுகின்றன.

தவிர ஐரோப்பிய ஒன்றியம் ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு வழங்குவதாக இருந்தால் பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்த வேண்டும் அல்லது அகற்ற வேண்டும் என்று நிபந்தனை விதித்திருந்தது. இது தொடர்பான இறுதி முடிவை பெரும்பாலும் வரும் ஏப்ரல் மாதமளவில் ஐரோப்பிய ஒன்றியம் எடுக்கலாம் என்று தெரிகிறது. எனவே பயங்கரவாத தடைசட்டத்தை நீக்க வேண்டும் என்ற



கோரிக்கையை எல்லா கட்சிகளும் ஒன்றாகக் கூடி முன்வைப்பதன் மூலம் அரசாங்கத்தின் மீது அதிகரித்த அழுத்தங்களை கொடுக்கலாம் என்று அவை நம்புகின்றன.

அது சரி தான். அப்படி ஒரு கூட்டுக் கோரிக்கை கட்டாயமாக முன்வைக்கப்பட வேண்டும். அதேசமயம் இந்தியாவை நோக்கி முன் வைக்கப்பட்டிருக்கும் அந்தக் கூட்டுக் கோரிக்கை வெறும் கடிதமாக முடியக் கூடாது. அது அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு செயல்பூர்வ வடிவத்தை எடுக்க வேண்டும். கடிதம் எழுதியதோடு மேற்படி கட்சிகளின் பணி முடிந்துவிடவில்லை. கடிதம் எழுதுவது மட்டுமே அரசியல் செயல்பாடாக இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. கடிதம் எழுதிய கட்சிகளுக்கு அந்த கடிதங்களை நோக்கி உழைக்க வேண்டிய கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. உதாரணமாக கடந்த மார்ச் மாதம் ஜெனிவா கூட்டத்தொடரை முன்னிட்டு மூன்று கட்சிகள் ஒன்றாக இணைந்து ஓர் ஆவணத்தை தயாரித்து ஜெனிவாவுக்கு அனுப்பின. அதன் விளைவாக மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கை ஒப்பீட்டளவில் கடுமையானதாகக் காணப்பட்டது. ஆனால் ஐநா தீர்மானம் வழமைபோல இலங்கை அரசாங்கத்துக்கு "என்கேஜ்" பண்ணத் தேவையான இடைவெளிகளை வழங்கியது. கடிதத்தை எழுதிய கட்சிகள் பின்னர் தங்களுக்கிடையே முட்டி மோதிக் கொண்டன.

குறிப்பாக அக்கடிதத்தில் பொறுப்புக் கூறலை ஜெனிவாவுக்கு வெளியே அதாவது மனித உரிமைகள் ஆணையத்துக்கு வெளியே கொண்டு போக வேண்டும் ஐநா பொதுச்சபை, பாதுகாப்புச் சபை போன்ற ஐநாவின் ஏனைய மன்றங்களை நோக்கி கொண்டு போக வேண்டும் அனைத்துலக நீதிமன்றம் போன்ற கட்டமைப்புக்களை நோக்கி கொண்டு போகவேண்டும் என்ற கோரிக்கையை அதிகம் வலியுறுத்தியது தமிழ் தேசிய மக்கள் முன்னணி தான். ஏனைய கட்சிகளும் அதை ஏற்றுக் கொண்டு அக்கடிதத்தை தயாரித்தன. கடிதம் அனுப்பப்பட்டது கடந்த ஜனவரி 21ஆம் திகதி.

இப்பொழுது அடுத்த ஜனவரி வந்துவிட்டது. மறுபடியும் ஒரு ஜெனிவாக் கூட்டத்தொடர் வருகிறது. இந்த ஓராண்டு காலகட்டத்துக்குள் மேற்படி கடிதத்தில் தாம் முன்வைத்த கோரிக்கையை செயல்படுத்தும் நோக்கத்தோடு மேற்படி கட்சிகள் குறிப்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்னென்ன செய்திருக்கிறது என்பதனை பட்டியலிட்டு காட்ட வேண்டும்.

அதே போல இந்தியாவுக்கு கடிதம் எழுதிய கட்சிகளும் அதன் அடுத்த கட்டமாக இந்தியாவை எப்படி தமிழ் மக்களுக்கு சாதகமாக தலையிட வைக்கலாம் என்று திட்டமிட்டு உழைக்க வேண்டும். ஏனெனில் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக ஆனந்த சங்கரி கடிதங்களை எழுதியது போலல்ல இது. நன்றி:- நிலாந்தன் இணையம்

# இந்தியாவை நோக்கி ஒரு கோரிக்கை!

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
-யதீந்திரா -

ஆறு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து தயாரித்த கடிதம் இந்திய தூதுவரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப் பட்டிருக்கின்றது. யுத்தத்திற்கு பின்னரான கடந்த பன்னிரெண்டு வருடங்களில் இந்தியாவை நோக்கி முதல் முதலாக தமிழ்தேசிய கட்சிகள் கூட்டுக் கோரிக்கையொன்றை முன் வைத்திருக்கின்றனர்.

கடந்த பன்னிரெண்டு வருடகால தமிழ் தேசிய அரசியல் செயற்பாடுகள் அனைத்துமே மேற்கு நோக்கியதாக மட்டுமே இருந்தது. அதாவது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடான அழுத்தங்களே ஒரேயொரு பிரதான விடயமாக இருந்திருக்கின்றன. ஆனால் இந்த பன்னிரெண்டு வருடகால அரசியல் முன்னெடுப்புக்கள் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வில் எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. இவ்வாறானதொரு சூழலில் தான் பிரதான தமிழ் கட்சிகள் ஒன்றாக இந்தியாவையே நோக்கி சென்றிருக்கின்றன.

இந்த இடத்தில் இதன் பின்னணி பற்றி சிறிது பார்ப்பது பொருத்தமென்று எண்ணுகின்றேன். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றும் தமிழரசு கட்சிக்கு அடுத்த நிலையில் பாராளுமன்ற ஆசனங்களை வைத்திருக்கும் கட்சியுமான தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) இந்த முயற்சியை ஆரம்பித்திருந்தது. இதன் பிரதான ஒருங்கிணைப்பாளராக டெலோவின் பேச்சாளர் சுரேன் குருசாமி செயற்பட்டிருந்தார். பின்னர் டெலோவின் முயற்சியுடன் கூட்டமைப்பின் பிறிதொரு பங்காளிக் கட்சியான சித்தார்த்தன் தலைமையிலான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும் (புளொட்) இணைந்து கொண்டது. இது தொடர்பான முதலாவது சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றிருந்தது.



இந்த சந்திப்பில் கூட்டமைப்பில் அதிக பாராளுமன்ற ஆசனங்களை கொண்டிருக்கும் இலங்கை தமிழரசு கட்சி பங்கு கொள்ளவில்லை. அதே வேளை தமிழரசு கட்சியின் முக்கியஸ்தர் எம்.ஏ. சுமந்திரன் டெலோவின் முயற்சியை பொது வெளிகளில் விமர்சித்திருந்தார். அதாவது 13வது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் இந்தியாவிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்க முடியாது என்னுமடிப்படையில் அவருடைய விமர்சனம் அமைந்திருந்தது. ஆனால் பின்னர் தமிழரசு கட்சியும் டெலோவின் முயற்சியுடன் இணைந்து கொண்டது.

பல கட்சிகள் ஒரு இணக்கப்பாட்டிற்கு வருகின்ற போது பலருடைய கருத்துக்களையும் உள்வாங்க வேண்டியது ஒரு ஜனநாயக நெறிமுறையாகும். அந்த அடிப்படையில் தான் தற்போது இந்திய பிரதமருக்கு அனுப்பப்பட்டிருக்கும் கடிதம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றது.

இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்னும் கோரிக்கையும் கடிதத்தில் இருக்கின்றது 13ஐ மட்டும் ஒரு கோரிக்கையாக முன் வைக்கக் கூடாதென்று வாதிட்ட தமிழசு கட்சியின் சொற்களும் கடிதத்தில் இருக்கின்றன. ஆனால் இந்த முயற்சி எந்த இலக்கின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டதோ அந்த இலக்கு நிறைவுசெய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் டெலோவின் முயற்சி வெற்றி பெற்றிருக்கின்றது.

அண்மைக் காலமாக இந்தியாவை தவிர்த்துச் செல்லும் வகையிலேயே கூட்டமைப்பின் தீர்மானங்கள் அமைந்திருந்தன. சம்பந்தன் இதனை திட்டமிட்டு செய்ததாக இந்தக் கட்டுரையாளர் கருதவில்லை. அதே வேளை சுமந்திரனின் தூண்டுதலால் இது நிகழ்ந்ததாகவும் இந்த கட்டுரையாளர் கருதவில்லை. சுமந்திரன் அரசியலுக்கு முற்றிலும் புதியவர். கொழும்பின் சிங்கள ஆளும் வர்க்கத்தோடு நெருங்கிப் பழகுவதற்கான வாய்ப்பு அவருக்கு முதல் முதலாக கிடைத்த போது அது அவருக்கு ஒரு பரவசத்தை கொடுத்திருக்கலாம். அவர்களுடன் உரையாடி விடயங்களை மிகவும் இலகுவாக வெற்றி கொள்ளலாம் என்று அவர் எண்ணியிருக்கலாம். ரணில் — மைத்திரி ஆட்சிக் காலத்தில் சுமந்திரன் மிகவும் வீறாப்பாகவே ஊடகங்களை எதிர்கொண்டிருந்தார். தீர்வை நெருங்கி விட்டதான ஒரு பார்வையே அவரது பேச்சுக்களில் தெரிந்தது. இறுதியில் என்ன நடந்தது? ஆனால் இந்தக் கட்டுரையாளர் உட்பட பலரும் எதிர்வு கூறியதற்கு அமைவாகவே விடயங்கள் நடந்தேறின.

இலங்கை தமிழர் விவகாரத்தில் இந்தியா ஒரு தீர்மானகரமான சக்தி. இது தொடர்பில் எனது பத்தியில் பல்வேறு சந்தர்பங்களில் பதிவு செய்திருக்கின்றேன். இலங்கையின் உடனடி அயல்நாடாக இந்தியா இருப்பதும் ஏற்கனவே இந்த பிரச்சினையில் இந்தியா நேரடியாக தலையீடு செய்து, இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஒரு விடயத்தை முன் வைத்திருப்பதும் பிரதான காரணங்களாகும். இதனை சாதாரணமாக புறம்தள்ளி விட்டு ஈழத் தமிழர்களால் எக்காலத்திலும் செயற்பட முடியாது. இது நமது விருப்பு வெறுப்புகள் சம்பந்தப்பட்ட விடயமல்ல.

மாறாக இந்த பிராந்தியத்தின் அரசியல் யதார்த்தம். இந்த யதார்த்தின் அடிப்படையில் தான் விரும்பமில்லாமிட்டாலும் கூட ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்தியாவின் தலையீட்டை அனுமதித்தார். இந்திய — இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டன் பின்னர் ஜே.ஆர் டைம்ஸ் ஒப் லண்டன் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார் அதாவது இந்தியா இந்த பிராந்தியத்தின் முதன்மையான சக்தி. நாங்கள் இந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது. நாங்கள் இந்தியாவுடன் செல்ல வேண்டும் அல்லது பிறிதொரு வலிமையான சக்தியோடு செல்ல வேண்டும்.

இந்திய — இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 35 வருடங்கள் சென்று விட்டது. இந்தக் காலத்தில், இலங்கைத்தீவிலும் ஈழத் தமிழர் அரசியலிலும், உலகளாவிய அரசியல் போக்குகளிலும் பல மாற்றங்கள் இடம் பெற்றிருக்கின்றன. ஆனாலும் ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் முன்னோக்கி செல்வதற்கான பிரகாசமான எந்தவொரு தெரிவையும் காண முடியவில்லை. மீளவும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நோக்கியே திரும்ப வேண்டியிருக்கின்றது.

ஏனெனில் இந்த இடைப்பட்ட காலத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் இந்தியா ஒரு பிராந்திய சக்தியென்பதும் அது எப்போது வேண்டுமானாலும் இலங்கை விடயத்தில் தலையீடு செய்யும் வல்லமையை கொண்டிருக்கின்றது என்பதிலும் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை. இனியும் ஏற்படாது.

இன்னும் சொல்லப் போனால் இந்தியாவின் பிராந்திய மற்றும் உலகளாவிய முக்கியத்துவம் முன்னரைவிடவும் அதிகரித்திருக்கின்றது. பனிப் போர் காலத்தில் அமெரிக்கா சோவியத் யூனியனை முடக்குவதற்காக சீனாவுடனான உறவை வலுப்படுத்தியது. இன்று சீனாவை ஒரு வறையறைக்குள் முடக்குவதற்கான அமெரிக்க மூலோபாயத்தின் பிரதான பங்காளியாக இந்தியா இருக்கின்றது. உலக அரசியலில் முன்னர் சோவியத் யூனியன் இருந்த இடத்தில் இப்போது சீனா இருக்கின்றது — சீனா இருந்த இடத்தில் இப்போது இந்தியா இருக்கின்றது. இந்த நிலையில் இந்தியாவை விலத்திக் கொண்டு ஈழத் தமிழர்களால் எங்கு ஓட முடியும்?

இந்த பின்னணியில் தான் இந்தியாவின் ஈடுபாட்டை மீளவும் தமிழர் பிரச்சினையில் ஏற்படுத்தும் நோக்கில் தமிழ் தேசிய கட்சிகள் இந்த வரலாற்று நகர்வை மேற்கொண்டிருக்கின்றன. பன்னிரெண்டு வருடங்களாக அரசியல் தீர்வு நோக்கி மேற் கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்திருக்கின்ற நிலையில் ான் இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்ற 13வது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலான கோரிக்கையொன்றுடன் புதுடில்லியை ஈழத் தமிழர்கள் அணுகியிருக்கின்றனர். 13வது திருத்தச் சட்டத்தை ஒரு இறுதியான அரசியல் தீர்வாக கட்சிகள் முன்வைக்கவில்லை. உண்மையில் இப்போது முன்னெடுக்கப்பட்டிருக்கும் நகர்வானது, 13வது திருத்தச்சட்டம் தொடர்பான விடயமே அல்ல. இது அடிப்படையில் இந்தியாவின் தலையீட்டை கோருகின்ற இந்தியாவின் பங்களிப்பு இல்லாமல் இந்த விடயத்தில் ஈழத் தமிழர்கள் பயணிக்க முடியாது என்பதை அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்தும் ஒரு தந்திரோபாய முன்னெடுப்பாகும்.

தமிழ் கட்சிகள் இவ்வாறானதொரு முடிவுக்கு சடுதியாக வரவில்லை என்பதையும் நாம் குறித்துக் கொள்ள வேண்டும். கடந்த பன்னிரெண்டு வருடங்களாக மேற்குலகத்தை நோக்கி பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வருடமும் ஜெனிவாவை முன்வைத்து பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றிருக்கின்றன. கட்சிகள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்கள் என்போர் ஏட்டிக்கு போட்டியான செயற்பாடுகளில் ஈடுபட்டனர். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் — இதுவரையில் எட்டு பிரேரணைகள் இலங்கையின் மீது நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. 2012இல் அமெரிக்க அனுசரணையுடன், இலங்கையின் மீதான முதலாவது பொறுப்பு கூறல் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இந்த மார்ச் மாதத்துடன் பத்து வருடங்கள் பூர்த்தியடையவுள்ளது.

ஆனாலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வில் என்ன முன்னேற்றங்கள் இடம் பெற்றிருக்கின்றன? சிலர் கூறலாம் கூட்டமைப்பு விடயங்களை சரியாக கையாளவில்லையென்று. ஆட்சி மாற்றத்தை கூட்டமைப்பு உச்சளவில் பயன்படுத்தியிருக்கலாம் என்னும் கருத்தில் இந்த கட்டுரையாளருக்கு முழுமையான உடன்பாடுண்டு.

ஆனால் சமஸ்டியடிப்படையிலான அரசியல் தீர்வை அடைவதற்கு கூட்டமைப்பு எதனையும் செய்யவில்லை என்றால் அது தவறானது. ஏனெனில் சமஸ்டித் தீர்விற்காக சிறிலங்கா அரசை இறங்கி வரச் செய்யக் கூடிய எந்தவொரு பலமும் கூட்டமைப்பிடம் இல்லை. அதே வேளை சர்வதேச நீதிப் பொறிமுறையை கூட்டமைப்பு பயன்படுத்தவில்லை என்னும் விமர்சனத்திலும் உண்மையில்லை. ஏனெனில் கூட்டமைப்பு என்னதான் உரத்துப் பேசியிருந்தாலும் கூட இப்போது இருக்கின்ற நிலைமைக்கு மேல் பெரிதாக எதுவும் நடந்திருக்காது. ஆனால் வாய்ப்புக்களை உச்சளவில் பயன்படுத்தி எடுக்கக் கூடியதை எடுத்துக் கொள்வது என்னும் தந்திரோபாய அடிப்படையில் கூட்டமைப்பு செயற்படுத்திருக்கவில்லை என்று கூறினால் அது சரியானது. தமிழ் கட்சிகள் இந்தியாவை நோக்கி கோரிக்கை முன்வைத்ததை ஒரு சிலர் விமர்சிக்கின்றனர். 13வது திருத்தச் சட்டத்திற்குள் தமிழ் மக்களின் அபிலாஸைகளை முடக்க முற்படுகின்றனர் என்பது தான் அவர்களது விமர்சனத்தின் அடிப்படையாகும். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியே இவ்வாறான விமர்சனத்தை மேற்கொண்டு(18ம் பக்கம் பார்க்க)

# சீனப் பொறிக்குள் சிக்கும் இலங்கை

ஆட்சிக்கு வந்த பின்னர் கடந்த இரண்டு ஆண்டுகளில் எந்தவொரு வெளிநாட்டுக் கடனையும் பெறவில்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ அண்மையில் நகைப்புக்கிடமான கருத்தைக் கூறியிருந்தார்.

அவரது அந்தக் கருத்து பொருளாதார நிபுணர்களைப் பெரிதும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. காரணம் எப்போதும் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தையே சமர்ப்பிக்கின்ற இலங்கை அந்தப் பற்றாக்குறைகளை வெளிநாட்டு உள்நாட்டுக் கடன்கள் போன்றவற்றின் மூலமே சமாளித்து வருகிறது.

அந்தக் கடன்கள் தான் நாட்டின் கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கின்றன. இப்போது இலங்கையர் ஒவ்வொருவரும் தலா 8 இலட்சம் ரூபா கடனாளியாக உள்ளனர் என்று சில நாட்களுக்கு முன்னதாக அமைச்சர் மஹிந்த அமரவீர கூறியிருக்கிறார்.

இந்த நிலைக்கு நாட்டைக் கொண்டு வந்து நிறுத்தியது. கொரோனா மட்டுமல்ல அதற்கு முன்னர் வாங்கிக் குவிக்கப்பட்ட கடன்களும் தான்.

போருக்காகவும் வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையை ஈடு செய்யவும் வெள்ளை யானைத் திட்டங்களுக்காகவும் வாங்கிக் குவிக்கப்பட்ட கடன்களும் கடன்களை அடைக்கப் பெறப்பட்ட கடன்களுமாக இலங்கையை கடன்பொறிக்குள் தள்ளியிருக்கின்றன. ஒன்றை ஈடுகட்ட இன்னொரு கடனைப் பெற்றுக் காலத்தை கடத்திக் கொண்டிருக்கும் நிலையில் இரண்டு ஆண்டுகளில் எந்த வெளிநாட்டுக் கடனையும் பெறவில்லை என்று ஜனாதிபதி கூறியது அவருக்கு நாட்டின் நிதி நிலைமை புரியவில்லை என்பதையே காட்டுகிறது.

வெளிநாடுகளிடம் நேரடியான கடன்கள் பெறா விட்டாலும் வெளிநாடுகளிடம் கடன்களை பெற மாட்டோம் முதலீடுகளை மட்டும் பெறுவோம் என்று மேடைகளில் முழங்கினாலும், வெளிநாடுகளிடம் இருந்து பெறப்படும் மறைமுக கடன்களில் தான் நாடு இன்றைக்கும் ஓடிக் கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டின் இறுதி வாரத்தின் தொடக் கத்தில், மத்திய வங்கியின் கையிருப்பில் வெளிநாட்டு நாணயக் கையிருப்பாக இருந் தது வெறும், 1.1 பில்லியன் டொலர்கள் தான். திடீரென வருடத்தின் இறுதிநாட்களில் அந்தக் கையிருப்பு 3.1 பில்லியன் டொலர்களாக அதிகரித்திருப்பதாக அறிக்கை வெளியிட்டார் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்.

எப்படி வெளிநாட்டு நாணயக் கையிருப்பு அதிகரித்தது என்ற கேள்விக்கு அதிகாரப்பூர்வமான பதில் இன்னமும் இல்லை.

அது சீனா கொடுத்த வெளிநாட்டு நாணயப் பரிமாற்றக் கடன் மூலம் தான் சாத்தியமாயிற்று என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. பொருளாதார நிபுணர்களும் அவ்வாறே கருதுகின்றனர்.

சுவாப் (SWAP) எனப்படும், கடன் வசதிகளைக் கொண்டே இன்றைய பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது அரசாங்கம். அண்மைக்காலத்தில் சீனாவிடம் இருந்து 1.5 பில்லியன் டொலர்கள் இவ்வாறு தான் பெறப்பட்டிருக்கிறது.

பங்களாதேஷிடம் இருந்து 500 மில்லியன் டொலர்கள் வாங்கப்பட்டது. இந்தியாவிடம் இருந்து 1.9 பில்லியன் டொலர்களைப் பெறுவதற்கான பேச்சுக்கள் நடக்கின்றன.

ஜப்பானிடம் இருந்து 3.5 பில்லியன் டொலர்களைப் பெறுவதற்கும் அரசாங்கம் பேச்சு நடத்திக் கொண்டிருக்கிறது. நைஜீரியாவிடம் இருந்து இந்த வகையில் எண்ணெயை கடனாக வாங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பஹ்ரெய்ன், குவைத், ஓமான் போன்ற நாடுகளிடமும் இவ்வாறான கடன்கள் கோரப்பட்டன. ஆக இலங்கை அரசாங்கம் வெளிப்படை நாணயக் கையிருப்பை அதிகரிப்பதற்காக நாணயப் பரிமாற்றுக் கடன்களைப்



பெற்றுக் கொண்டேயிருக்கிறது. இதனை அரசாங்கம் ஒரு கடனாக கருதாவிடினும் இது பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. வெளிநாட்டு நாணயக் கையிருப்பு நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு தற்காலிகமான ஒரு குறுங்கால தீர்வாகத் தான் இந்த சுவாப் வசதி இருக்கும் என்கிறார் பொருளாதார நிபுணரும் மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநருமான டபிள்யூ.ஏ.விஜேவர்த்தன.

ஒரு நாடு இன்னொரு நாட்டின் மத்திய வங்கியிடம் இருந்து இவ்வகையான (சுவாப்) கடன் வசதியைப் பெற்றுக் கொள்கிறது. இணக்கப்பாட்டின் அடிப்படையில் பொதுவாக 3 மாதங்களில் செலுத்தும் வகையில் இவ்வகை கடன் வசதிகள் பெறப்படும். அதன் முதிர்வுக்காலம், இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஆறு மாதங்களுக்கோ ஒரு வருடத்துக்கோ நீடிக்கப்படும். இவ்வாறு தான் சீனாவிடம் பெறப்பட்ட கடன்களை திருப்பி செலுத்தும் தவணைக் காலத்தை நீடிக்க அரசாங்கம் பேச்சு நடத்துகிறது.

இந்தியாவும் சீனாவும் இதற்கு இணங்கினால் ஏனைய நாடுகளும் அவ்வாறான இணக்கத்துக்கு வரும் என்று அரசாங்கம் நம்புகிறது.

சுவாப் வசதியைப் பயன்படுத்தி சீனாவிடம் இருந்து அல்லது வேறு நாடுகளிடம் இருந்து பெறப்படும் கடன்களும் ஒரு வகை பொறி தான்.

குறிப்பாக சீனா இதனை ஒரு பொறியாகவே பயன்படுத்துகிறது. சீனாவிடம் இருந்து சுவாப் கடன் வசதியைப் பெறும் போது இலங்கை மத்திய வங்கியின் பெயரில் சீன வங்கியின் கணக்கில் அந்த நிதி வைப்பிலிடப்படும்.

இலங்கைக்கு சீனா யுவான் நாணயத்தில் தான் கடனைக் கொடுத்திருக்கிறது. சீன மத்திய வங்கியில் இருந்தாலும் இது இலங்கைக்குச் சொந்தமானது. அதற்குப் பதிலாக 10 பில்லியன் யுவான்களுக்கு இணையான இலங்கை நாணயம் சீன வங்கியின் பெயரிலான கணக்கில் இலங்கை மத்திய வங்கியில் வைப்பிலிடப்படும்.

இவ்வாறு சீன வங்கியில் இலங்கை மத்திய வங்கியின் பெயரில் வைப்பு செய்யப்பட்டதும் இலங்கையின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு அதிகரிக்கும். சீனாவில் இருந்து இறக்குமதிகளைச் செய்வதற்கு சீன வங்கியில் உள்ள யுவான் நாணயத்தை இலங்கை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அதுபோன்றே இலங்கை மத்தியவங்கியில் சீன வங்கியின் பெயரில் வைப்பிலிடப்படும் நிதியை சீனா இங்கு திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யலாம். அல்லது சீனாவின் திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் செலவுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்தால் அதற்கு 8 வீத வட்டியை செலுத்த வேண்டியிருக்கும். அந்த கொடுப்பனவு சீனாவுக்குச் செல்லும். அதைவிட நாணயப் பரிமாற்றுக் கடனுக்கான வட்டியாக 2சதவீதம் செலுத்த வேண்டியிருக்கும். அதனையும் சேர்த்து இலங்கை 10 சதவீத வட்டியைச் சீனாவுக்கு செலுத்த நேரிடும்.

சாதாரணமாக சர்வதேச நிதி நிறுவனங்களிலும் நாடுகளிலும் கடனைப் பெறும் போது 2 வீத வட்டியே செலுத்த வேண்டியிருக்கும்.

ஆனால் சுவாப் கடன்களுக்கு 10 சதவீத வட்டியை செலுத்தும் நிலை இலங்கைக்கு ஏற்படுகிறது. இது ஒரு வகையான கடன் பொறி.

அடுத்து சுவாப் வசதி மூலம் பெறப்பட்ட கடனை இலங்கை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொண்டால் இன்னொரு சிக்கல் ஏற்படும். சீனாவின் மத்திய வங்கிக்கு அந்தக் கடனை யுவானாக செலுத்த வேண்டும்.

அதற்கு டொலர்களைக் கொடுத்தே

கட்டுரையாளர்:
இந்தியாவில் இருந்து
கேணல் ஹரிஹரன்



யுவானை வாங்க வேண்டியிருக்கும். அல்லது வேறெவரிடம் இருந்தும் கடனை வாங்க வேண்டியிருக்கும்


இலங்கையில் ஏற்கனவே டொலர்களுக்கு பற்றாக்குறை இருக்கும் போது டொலரைக் கொடுத்து யுவானை வாங்கும் போது மேலும் இழப்புகள் ஏற்படும். தற்காலிகமாக நெருக்கடியைத் தீர்க்கக் கூடிய ஒரு நிதி வசதியாக தான் சுவாப் வசதி இருந்தாலும் இலங்கை அரசாங்கம் அதனை ஒரு நீண்டகாலப் பிரச்சினைக்கான தீர்வாக மாற்ற முனைகிறது. வெளிநாட்டுக் கடன்களைப் பெறவில்லை என்று கூறிக் கொண்டாலும் சுவாப் வசதியைக் கொண்டு கடன்களைத் திரட்டி கடன் பொறிகளையே உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

இந்தக் கடன் பொறிகள் நாட்டை மேலும் படுகுழிக்குள் தான் தள்ளிவிடப் போகிறது என்கிறார்கள் நிபுணர்கள்.

அத்தகைய பேரழிவைத் தவிர்ப்பதற்காக சீனா போன்ற நாடுகளின் காலடியில் மண்டியிட நேரிடும்.

அவ்வாறானதொரு நிலையை நோக்கித் தான் இலங்கையை வழி நடத்திக் கொண்டிருக்கிறது தற்போதைய அரசாங்கம்.

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# ஈழத்தமிழர் தேசத்தின் தலைமைத்துவம்

(9ம் பக்கத் தொடர்ச்சி) அமைப்புகள் குறித்தும் எம் கருத்துகளை தமிழீழ மண்ணின் அறிஞர்கள் எனச் சொல்லப்படுவோர் எல்லோரும் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். ஏற்றுக்கொள்ள மறுத்தனர் என்பதை விட நம்ப மறுத்தனர் என்றே சொல்லலாம். நேரடியான பட்டறிவுகளினூடாக அதை அறிந்த பின்பே நாம் என்றோ சொன்னவைகளைப் புரிந்து கொண்டனர்," என்று யோகி 1992 இல் எழுதினார்.

இவ்வாறு, யோகி 'எல்லோரும்' என்று குறிப்பிட்டதற்குள் யார் யார் எல்லாம் உள்ளடக்கம் என்பதை விலாவாரியாக எடுத்துரைக்க வேண்டிய தேவை இங்கு இல்லை.

அதே 'எல்லோரில்' இன்றும் இருப்பவர்களுக்கும், அவர்கள் கருத்தூட்டிச், சீராட்டிப் பாராட்டி வளர்க்கும் அவர்தம் குஞ்சுகளுக்கும், இதோ, யோகியின் கட்டுரை மீள் அர்ப்பணமாகட்டும்.

பசுத்தோல் போர்த்தோரிற் சிலர் தருணம் வரும் போது வேண்டுமென்றே கோட்டை விடுபவர்கள்.

வேறு விடயங்களைத் திசை திருப்பிப் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர்கள். எல்லாம் முடிந்தபின் ஆய்வாளர்களாக மீண்டும் வலம் வருவார்கள். இந்தச் சந்தர்ப்பவாதிகளும் இம்முறை வசமாக மாட்டிக் கொண்டார்கள்.

இவர்களுக்கெல்லாம் அடுத்த ஒரு வகையினரும் உளர். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் நிராகரிக்கவில்லை என்பதாகவும், அதைப் போலத் தாங்களும் அதை இன்றும் நிராகரிக்கவில்லை என்றும், பதின்மூன்றை மட்டுமே தாங்கள் ஆரம்பம் இல்லை என்று நிராகரித்து வருவதாகவும் புதிய புலுடா விடுகின்ற ஈருருளி அரசியலார்களே அவர்கள். எல்லாம் முடிந்த பின் செத்த பாம்படிப்பதற்கு மூன்று மாதம் கழித்து தடியும் இடமும் தேடிக் கொண்டிருக்கிறார் கஜேந்திரகுமார். சுயநிர்ணய உரிமையைக் கை விட்ட அரசியல் தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பித்து விட்டு இன்னொரு சமஸ்டிக் குழுவையே அவர் வளர்க்க முற்படுகிறார்.

அதற்கும் சுமந்திரன் அரசியலுக்கும் அதிக வேறுபாடில்லை. காலந்தாழ்த்தியும், குறி தவறியும் செத்த பாம்படித்துத் தேர்தல் அரசியற் தமிழ்த் தேசியம் பேசும் அவர்களையும் தாண்டியதாகவே தமிழ்த் தேசியம் தனது அர்த்தமுள்ள பயணத்தை இனி வருங்கால் மேற்கொள்ள முடியும்.

மேற்குறித்த எல்லா 'விடுப்புகளுக்கும்' பதில் சொல்வதற்கு அப்பால், யோகி முன் வைத்த கட்டுரை ஆழமான கிரகிப்புக்கு உரியது. அதன் தார்ப்பரியம் மிகவும் அகலமானது. அது தலைமையின் பொறுப்புக்கூறல் பற்றியது.

தலைமைத்துவத்தின் பொறுப்புக் கூறலுக்குள் பல விடயங்கள், நெகிழ்ச்சித் தன்மை உள்ளடங்கலாக, அடங்கும். அவ்வாறான தன்மைகளும் அவற்றுக்குரிய எல்லைகளும் பற்றிய கருத்து ரீதியான ஆய்வே தற்போது மேற்கொள்ளப்பட வேண்டியது.அதை அடுத்த கட்டுரையிற் பார்ப்போம். அந்தக் கட்டுரை வர முன்னதாக, இந்தியப் பிரதமருக்கு கடிதம் வரையும் படலம், கண்டம்-விட்டுக்-கண்டமும், விடுதி-விட்டு-விடுதியும் பாய்ந்து கொண்டிருந்த போது தமிழ்நெற் என்ன செய்தது என்பதை அறிந்திராத வாசகர்களுக்காகச் சில விடயங்களை எடுத்தியம்ப வேண்டிய பொறுப்புக்கூறலும் ஓர் ஊடகமாக எமக்குண்டு. அதை நாம் செய்தோம். குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்ற ஆரம்பகால மாவீரரின் தற்கொடைகளை விடவும் சந்தர்ப்பவாத அரசியலே சரணம் என்ற நிலைக்குச் சென்றிருக்கும் ரெலோத் தரப்பும், 'ஒன்றிணைந்த, பிரிக்கப்படாத, பிரிக்கப்படவே முடியாத சிறிலங்காவுக்குள்' அதிகாரப்பரவலோடு சமஸ்டி நோக்கித் தீர்வு என்று தேர்தல் விஞ்ஞாபனங்களை மேற்கோள் காட்டிச் சொல்லும் சுமந்திரன் தரப்புமாக நடை பெற்று முடிந்த இழுபறிக் கடிதப்படலம், கடிதமாகிக் கையளிக்கப்பட முன்பே செத்த பாம்பாகி விட்டது.

உண்மையான ஈழத் தமிழ்த் தேசியத் தலைமை என்பது தேர்தல் அரசியலாருக்கு அப்பாற்பட்டது. அது முழுமையான ஒரு கோட்பாடு. ஒட்டு மொத்த ஈழத்தமிழர் இறைமையின் வடிவமான தேசியத் தலைவரின் ஆளுமையின் தலை மூளையாக உருவேறியிருந்தது. அந்தக் கோட்பாடு. அதை ஒரு இராணுவ மூளையாக மட்டும் அங்கீகரிக்கும் பலர், எம்மவரிற் பலர் உள்ளடங்கலாக, அதன் அடிப்படையே அரசியல் மூளை என்பதை மறந்து விடுகின்றனர்.

அதே தேசியத் தலைவர் பிரபாகரனின் மூளை ஒரு கூட்டு மூளையாக இயங்க வேண்டிய காலம் இது. அதற்கான கருத்துருவாக்க அலை அடுத்தகட்டமாக விரியட்டும்.

நன்றி:- தமிழ்நெற்

(16ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கையை முன்வைக்கும் போது இந்தியாவிற்கு உரித்தான விடயமொன்றுடன் செல்வது தானே சரியானது. இந்த அடிப்படையில் தான் இந்திய இலங்கை ஒப்பந்தத்தினால் கொண்டு வரப்பட்ட 13வது திருத்தச்சட்டத்தை கையிலெடுக்க வேண்டியிருக்கின்றது. பிரதமர் மோடிக்கான கடிதத்தில் கையெழுத்திட்டிருக்கின்ற கட்சிகள் மிகவும் தூரநோக்குடனும் தந்திரோபாயமாகவும்தான் இந்த விடயத்தை கையாண்டிருக்கின்றன. ஆனால் இந்த விடயத்தை விமர்சனம் செய்வோரிடம் ஒரு அடிப்படையான தவறுண்டு.

அதாவது 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்று கூறுவோரை விமர்சிப்பவர்கள் சர்வதேச அழுத்தங்களின் அச்சாணியாக கருதப்படும், ஜெனிவா பிரேரணைகள் 13வது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு பற்றி வலியுறுத்துவதை வசதியாக மறந்து விடுகின்றனர். இந்த உண்மையை மக்கள் மத்தியில் திட்டமிட்டு மறைக்கின்றனர். 2009 மே மாதத்தில் யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையை பாராட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்தில் 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இறுதியாக கொண்டுவரப்பட்ட 46:1 தீர்மானத்திலும் 13வது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் அரசாங்கத்தின் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமென்று தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதே வேளை மாகாண சபைகள் இயங்குவதற்கான சூழலை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அவ்வாறாயின் இந்த பிரேரணைகளையுமல்லவா தமிழர் தரப்புக்கள் நிராகரிக்க வேண்டும்? எனவே இங்கு அடிப்படையில் பிரச்சினையாக இருப்பது 13வது திருத்தச்சட்டமா அல்லது, இந்தியாவை நோக்கி செல்வதா? தற்போது ஒரு நேர்கோட்டில் சந்தித்திருக்கும் பிரதான தமிழ் தேசிய கட்சிகள் அனைத்தும் காலத்தை சரியாக விளங்கிக் கொண்டு செயற்பட்டிருக்கின்றன. ஆனால் இத்துடன் கட்சிகளின் பணி முடிந்து விடவில்லை. இதனை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான தந்திரோபாய நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும். இந்தியாவிற்கு பல்வேறு நடைமுறை சிக்கல்கள் உண்டு. அதனை விளங்கிக்கொண்டு புதுடில்லியை நோக்கி தொடர்ந்தும் செயற்படுவதற்கான முன்னெடுப்புக்களையும் கட்சிகள் முன்னெடுக்க வேண்டும்.




# தென்னிலங்கை அரசியலில் எட்டப்படும் இராஜதந்திர அடைவுகள்

தென் இலங்கை அரசியலில் முன் பின்னான விவாதங்கள் அதிக அரசியல் நெருக்கடியை ஏற்படுத்திவருகிறன. குறிப்பாக மாற்று அரசாங்கம் பற்றி வாதங்களும் ஆளும் கட்சிக்குள் குழப்பம் என்ற கருத்து நிகழ்வதையும் அவதானிக்க முடிகிறது. ஆனால் அவை அனைத்துமே வெறும் அரசியல் உரையாடல்களாக காணப்படுகின்றனவே அன்றி ஆழமான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவிடயமாக தென்படவில்லை. அதற்கான அடிப்படை தற்போதைய ஆளும் தரப்பின் இயல்பான பலமும் இராணுவ செல்வாக்கும் ஒரு பக்கம் அமைய மறு பக்கத்தில் பிராந்திய சர்வதேச சக்திகளை சரியான முறையில் கையாளும் போக்கையுமே காரணமாகக் கொள்ள வேண்டியுள்ளது.

அதே போன்று ஜனாதிபதியின் பாராளுமன்ற கொள்கை விளக்க உரையில் தமிழர்களது தேசியப் பிரச்சினைக்கு எந்த தீர்வும் முன் வைக்கவில்லை என்ற ஆதங்கமும் அதற்கான வார்த்தைகளும் இலங்கைத்தீவின் அரசியலில் இடம் பிடித்த விடயமாக உள்ளது. ஆனால் கடந்த எழுபது வருடமாக தமிழ் அரசியல் தலைமைகளது ஏமாற்றத்தின் அனுபவப் பாடத்தை எப்படி விளங்கிக் கொள்வதென்பது தெரியாத விடயமாகவே உள்ளது. சிங்கள அரசியல் தலைமைகள் தமிழ் அரசியல் வாதிகளை ஏமாற்றுவதல்ல விடயம். தமிழ் மக்களை தமிழ் அரசியல் வாதிகள் ஏமாற்றுகிறார்கள் என்பதே கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். இக்கட்டுரையும் தென் இலங்கையின் அரசியல் நகர்வுகளில் ஏற்பட்டுள்ள போக்கினைத் தேடுவதாக உள்ளது.

தென் இலங்கை ஆட்சியாளர்கள் அதிக இராசதந்திர அறுவடைகளை எட்டி வருகின்றனர். அதற்கான ஒத்துழைப்பினை கட்சி வேறுபாடுகளைக் கடந்தும் ஊடக தர்மத்தை புறந்தள்ளியும் அத்தகைய இராஜதந்திர செய்முறை கையாளப்படுகிறது.

குறிப்பாக இந்தியத் தரப்பினை கையாண்டது பற்றி இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மிலிந்த மொறக்கொடயின் இராஜதந்திரம் பற்றி தென் இலங்கை ஆங்கில ஊடகங்கள் அதிக பராட்டினை வெளிப்படுத்தியுள்ளன. இலங்கையின் பொருளாதார நெருக்கடியை வைத்து இலங்கைக்கும் இந்தியாவுக்குமான அரசியலை கையாண்ட விதமே தனித்துவமானதாக அமைந்துள்ளது.

வெளிப்படையாகப் பார்த்தால் ஐம்பது வருடங்களுக்கு பின்பு இந்தியா வெற்றி பெற்றதாக கூறப்பட்டாலும் இலங்கை இந்தியாவை திருகோணமலை எண்ணெய் குதங்களுக்குள் மட்டுப்படுத்தி விட்டது என்ற வாதமே மேலோங்கியுள்ளது. இருந்த போதும் இரு தரப்பும் ஆரோக்கியமான நகர்வுகளை எட்டியுள்ளன.

ஈழத்தமிழார்களுக்கு மட்டும் நிர்கதி நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. அதற்கான அடிப்படையானது தென் இலங்கை அரசியல் தலைவர்களது உத்தியால் ஏற்பட்ட அறுவடையாகவே காணப்படுகிறது. சீனா தொடர்பில் கிடைத்த வாய்ப்பினை முழுமையாக தென் இலங்கை ஆட்சியாளர்கள் தோற்கடித்து விட்டனர். அறிக்கையிடும் தமிழ் அரசியல்வாதிகளால் ஏமாற்றத்தையே தமிழ் மக்களுக்கு வழங்க முடியுமே அன்றி ஆரோக்கியமான இருப்பினை ஏற்படுத்த முடியாது.

கொழும்புக்கு வருகை தந்துள்ள தெற்காசியா மற்றும் பொதுநலவாய அபிவிருத்தி விவகாரத்திற்கான அமைச்சர் தாரிக் அஹமட் அவர்களை சந்தித்த ஜனாதிபதி புலம்பெயர்ந்த பிரிட்டனில் வாழும் இலங்கையர்களுடன் கலந்துரையாட விருப்பம் தெரிவித்ததுடன் அதற்கான ஏற்பாட்டினை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.



அதே நேரம் இலங்கையில் அனைத்து பிரஜைகளுக்கான மனித உரிமைகளை உறுதி செய்வதை முன்னிறுத்தி செயல்பட்டால் பிரிட்டன் ஆதரவு வழங்கத் தயார் எனவும் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் சமாதானத்தையும் பொறுப்புக் கூறலையும் நல்லிணக்கத்தையும் சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமையையும் உறுதிப்படுத்துவதற்கான ஜெனீவாவின் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தாரிக் அஹமட் கேட்டுள்ளார்.

வர்த்தகம் முதலீடு மற்றும் பரஸ்பரம் பாதுகாப்பு ஆகியவற்றில் இந்திய பசுபிக் பிராந்தியத்தின் முக்கியத்துவம் குறித்து பிரிட்டன் விசேட கவனம் செலுத்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். அது மட்டுமன்றி பிரிட்டன் பொருளாதார ரீதியில் தொடர்பினை அடிப்படையாகக் கொண்டு வலையமைப்பினை கட்டியெழுப்பி வருவதாகவும் அதில் இலங்கையுடன் ஒன்றிணைந்து செயல்பட விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் பிரிட்டன் முன்வைத்துள்ள அம்சங்களை புரிந்து கொள்வது அவசியமானது.

முதலாவது மனித உரிமைகள் தொடர்பிலேயே பிரிட்டன் அதிக கவனம் செலுத்துவதுடன் ஜெனீவா முன்வைப்புகள் தொடர்பில் கரிசனை கொள்வதனை அவதானிக்க முடிகிறது. சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தும் பிரிட்டன் தமிழ்த் தரப்புடனான உரையாடல் தொடர்பில் தெளிவான பதிலை வெளிப்படுத்தாத நிலையைக் காண முடிகிறது.

அதாவது தமிழ்த் தரப்புடனான உரையாடலில் தமிழ்த் தரப்பு முன் வைத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் போது உங்கள் கோரிக்கையை ஆக்கபூர்வமாக அணுகுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மட்டுமே வாக்குறுதியளித்தார். தமிழ்த் தரப்பின் நியாயமான தீர்வு பற்றி எந்தவித பதிலையும் வழங்காமையின் ஊடாக பிரிட்டனின் உள்நோக்கத்தை உணர முடிகிறது.

இரண்டு இந்தியத் தரப்பிடமிருந்து தென் இலங்கை மீளும் போது ஒரு நெருக்கடியாக பிரிட்டனின் அணுகுமுறை அமைந்துள்ளது போல் தெரிகிறது. ஆனால் பிரிட்டனின் அணுகுமுறை இலங்கையுடனான இந்தோ பசுபிக் வலையமைப்பினை விருத்தி செய்வதாகவே உள்ளது. அதற்கான உபாயங்களையே முதன்மைப்படுத்தியுள்ளதனை அவரது உரையாடல் வெளிப்படுத்துகிறது. பிரதானமாக பிரிட்டனின் பொருளாதார வலையமைப்புக்குள் இலங்கையை உள்ளடக்குவது மற்றும் இந்தோ பசுபிக் உபாயத்துக்குள் இலங்கையை இணைப்பது ஆகிய இரு இலக்குகளையே தாரிக் அஹமட் வெளிப்படுத்தியுள்ளார். அவரது மனித உரிமை தொடர்பிலான எண்ணமும் கரிசனையும் பிரிட்டனின் அடிப்படை அரசியலாக அமைந்தாலும் ஏனைய விடயங்களை அடைவதற்கான வழிமுறையாகவே மனித உரிமை பற்றிய உரையாடல் காணப்படுகிறது. எவ்வாறு அமைந்தாலும் பிரிட்டனின் நகர்வு இலங்கைத் தீவு பொறுத்த மேற்குலகத்தின் கொள்கையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

மூன்றாவது பிரிட்டன் அமைச்சரது விஜயத்தினை ஜனாதிபதி தமக்குச் சாதமாக மாற்ற முன்வைத்துள்ள உபாயமாகவே புலம்பெயர்ந்த பிரிட்டன் வாழ் இலங்கைப் பிரஜைகளுடன் சேர்ந்து இயங்குவதற்கு விரும்புவதாகவும் அவர்களுடன் உரையாடப் போவதான கோரிக்கை அமைந்துள்ளது.

ஜனாதிபதி இலங்கையர் என்று குறிப்பிட்டதாகவே ஊடகப் பரப்பில் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் அது ஈழத்தமிழர்களாக இருக்க முடியும் என்ற வாதங்களே முதன்மையாக உள்ளன. ஐ.நா. சபையில் உரையாற்றச் சென்ற போது ஜனாதிபதி புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்களுடன் உரையாடப் போவதாக தெரிவித்திருந்தமை நினைவு கொள்ளத் தக்கது. அப்படியாயின் அத்தகை நகர்வென்பது தென் இலங்கை அரசியல் தலைமைகளின் இராஜதந்திர செய்முறையாகவே அமைய வாய்ப்புள்ளது.

ஏறக்குறை ஈழத்தமிழரது அரசியல் இருப்பானது புலம்பெயர்ந்த தளத்திலேயே பாதுகாக்கப்படுகிறதைக் காண முடிகிறது. அதனை நோக்கிய நகர்வுகளை மேற்கொள்ள திட்டமிடும் தென் இலங்கை ஆட்சியாளர்கள் அதனையும் முறியடிப்பார்களாயின் முழுமையாக புலத்திலுள்ள ஈழத்தமிழரது இருப்பு கேள்விக்குட்படுவதாகவே அமையும். அதன் பின்னர் புலத்திலுள்ள ஈழத் தமிழர்களை கையாளுவது இலகுவானதென தென் இலங்கை ஆட்சியாளர்கள் கருதுகின்றனர்.

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– K.T. கணேசலிங்கம் –



எனவே தென் இலங்கையின் ஆட்சியாளர்களது இராஜதந்திரச் செய்முறை கொள்கைப் பிரகடனத்திலும் இந்தியாவுடனும் எப்படி வாய்ப்பானதாக அமைய திட்டமிடப்பட்டுள்ளார்களே அவ்வாறே பிரிட்டனின் அமைச்சரது விஜயத்தையும் கையாள திட்டமிட்டுள்ளனர்.

இலங்கைக்கும் பிரிட்டனுக்குமான மூன்று நூற்றாண்டு அடிமைத்தனத்தை விட்டு விட்டு 75 வருட இராஜீக உறவைக் கொண்டாட இலங்கை ஆட்சியாளர்கள் தயாகின்றனர். இதுவே தென் இலங்கையின் தந்திரோபாய நகர்வாகும்.

இதனை எல்லாம் எதிர்கொள்ள முடியாது தமிழ் அரசியல் வாதிகள் ஆத்தரம் கொள்வதில் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லை. அரசியலில் எல்லாவற்றையும் தந்திரமாகவே பார்க்க வேண்டும். இராஜதந்திரம் என்பது ஏமாற்றுத் தனத்தாலும் சதியினாலுமே கட்டப்பட்டுள்ளது. கௌடில்லியர் கூறும் இராஜதந்திரம் அதனையே முதன்மைப்படுத்துகிறது. நன்றி:- அருவி இணையம்

## இலங்கைக்கு இந்தியா வழங்கிய கடனுதவியைத்


(5ம் பக்கத் தொடர்ச்சி) அடிப்படையாகக் கொண்டு அனைவரையும் உள்வாங்கிய, நிலைபேறான சமாதானத்தை உறுதிசெய்வதென்பது வலுவான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு மிகவும் அவசியமானதாகும். அதனூடாக பெருமளவான வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்துக்கொள்ளமுடிவதுடன் பொருளாதாரத்தின் இயலுமையை மேலும் வலுப்படுத்தவும் முடியும்.

அத்தோடு சமூகங்களுக்கு இடையிலான மோதல்களை முடிவிற்குக் கொண்டு வருதல், மனித உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் சமூகங்களுக்கு இடையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை இலக்காகக்கொண்ட செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்காக மோதல்கள், உறுதிப்பாடு மற்றும் பாதுகாப்பு தொடர்பான நிதியத்தின் ஊடாக இலங்கைக்கு 3.7 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ் நிதியுதவியை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது' என்று தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்விஜயத்தின் போது தாரிக் அஹமட் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலாக அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை நிகழ்த்தியிருந்தார். இதன்போது இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவின் முக்கியத்துவம் குறித்தும் கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியின் பின்னரான பொருளாதார மீட்சி மற்றும் காலநிலை மாற்றம் உள்ளடங்கலாக இருதரப்பினதும் அக்கறைக்குரிய பொதுவான விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அதே போன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் தாரிக் அஹமட், அங்கு அரசியல் தலைவர்களையும் சிவில் சமூகப்பிரதிநிதிகளையும் சந்தித்துப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தார்.

தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் கரிசனைக்குரிய விடயங்கள், உள்ளூராட்சி மன்ற நிர்வாகம், அனைத்துத்தரப்பினரையும் உள்ளடக்கும் வகையிலான அரசியல் பங்கேற்பு என்பன பற்றி இதன்போது ஆராயப்பட்டது. அத்தோடு சகிப்புத் தன்மையுடன் அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மதச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கும் பிரிட்டன் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்றும் அவர் இதன்போது உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது.



# Amma Pawn Broker

## அம்மா தங்கநகை அடைவு மாடம்

கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்



Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு

அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

**1.0%** முதல் **1.5%** வரை



## அதிரடி சிறப்பு வட்டி வீதம்



உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8

ammapawnbroker@gmail.com


**416-757-0034**
**416-994-3861**








PRIVATE & CONFIDENTIAL



# PANDIT: KRISHNAM RAJU

**Solutions & Suggestions on:**

| | |
|---|---|
| Black Magic | Education, Family |
| Evil Spirits | Employment, Court |
| Jealousy | Husband & Wife |
| Health, Wealth | Children Problem |
| Business, Marriage | Business Prob. |
| Drinking Problem | Vasthu Prob |
| Love, Divorce | Real Estate |
| Visa Prob. | and all other Problems |

பிரபல மந்திரிமார்களும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது நடக்கப் போறது பற்றிச் சொல்லுவார்

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், விசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
- ஆரோக்கியம் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஸ்டி.
- நாகதோசம் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

உடனே பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம். ஏற்கனவே வேறு பல சாஸ்திரிகளை சந்தித்து மனவேதனையுடன் இருந்திருப்பீர்கள். ஒருதரம் பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்.

**An Expert Spirtualist treats Black Magic, Witchcraft, Jaadu, Obeau and gives 100% Immediate Protection**

880 Markham Rd, Scarborough ON M1H 2Y2
(MARKHAM RD. & PAINTED POST DR.)

**437-213-3305**

# பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் ஸ்ராலின்!



முன்னெப்போதும் பார்த்திராத ஸ்டாலினாக தற்போதைய முதல்வர் அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார் என்பது யாவரும் அறிந்ததே. தி.மு.க. ஆட்சி தொடங்கிய நாள் முதல் மக்களின் கவனத்தைத் தன்பாலிருந்து திசை திருப்ப விடாதிருக்கும் முயற்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஈடுபட்டு வருகிறார். விரைவில் வரவிருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தலிலும் அவ்வாறானதொரு திட்டத்தை தடாலடியாக அமுல்படுத்தியிருக்கிறார் மு.க.ஸ்டாலின்.

எதிர்வரும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் சென்னை மாநகராட்சி, தாம்பரம், ஆவடி, கடலூர், திண்டுக்கல், வேலூர், கரூர், விருதுநகர், காஞ்சிபுரம், மதுரை, கோவை, ஈரோடு ஆகிய மாநகராட்சிகளுக்கான மேயர் பதவிகளுக்கு பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் சென்னை மற்றும் தாம்பரம் மாநகராட்சி என்பன பட்டியல் இனப்பெண் உறுப்பினர்களுக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சென்னையில் உள்ள 200 வட்டாரங்களில் 32 வட்டாரங்கள் பட்டியல் இனத்தவர்க்கும் அவற்றுள் 16 பெண்களுக்கும் மீதமுள்ளவற்றில் 84 வட்டாரங்கள் பெண்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இம்முறை சென்னை மாநகராட்சியை ஏராளமான பெண் வேட்பாளர்கள் பெண் பிரதிநிதிகள் அலங்கரிக்கவுள்ளனர். தங்களுக்காக உழைத்த பெண் உறுப்பினர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற முஸ்தீபிலேயே தி.மு.க. திட்டமிட்டு இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளது. இதன் பின்னணியில் உள்ள அரசியல் என்னவென்றால் இந்த ஏற்பாட்டின்படி பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகமாக இருப்பதால் பெண்களின் வாக்குகள் அத்தனையையும் சிந்தாமல் சிதறாமல் தி.மு.க.வுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான முதல்வர் மு.க.ஸ்டாலினின் இந்த உத்தரவானது சாணக்கியத்துவம் மிக்கது என்பதே அரசியல் நோக்கர்களின் ஏகோபித்த கருத்து. பெண்களை அரச இயந்திரத்துக்குள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பிணைத்துக் கொள்வது ஒருபுறமிருக்க

தனது கட்சித் தொண்டர்களின் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்து விடலாம் என்ற கச்சிதமான கருத்தின் அடிப்படையிலேயே முதல்வர் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார். அண்மைக்காலமாக பெண்களின் வாக்குகள் ஒவ்வொன்றையும் தமது கட்சியின் பால் திருப்புவதற்கான முயற்சிகள் முதல்வர் ஸ்டாலின் எடுத்து வருவதை மக்கள் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். அதற்கு பொங்கல் சிறப்புத் தொகுப்பு ஒரு சிறந்த உதாரணம்.

ஏறக்குறைய இரண்டு ஆண்டு காலத்துக்குப் பின் பொங்கல் விழாவை விமரிசையாகக் கொண்டாட மக்கள் நினைத்திருந்தனர். ஆனால் வால் போய் கத்தி வந்த கதையாக ஒமிக்ரோன் வந்து சேர்ந்ததும் மக்கள் கலங்கித் தான் போனார்கள். அவர்களது கலக்கத்தைக் கலைக்கும் வகையிலேயே பொங்கல் சிறப்புத் தொகுப்புப் பொதி அறிமுகம் செய்யப்பட்டது.

பொங்கல் சிறப்புத் தொகுப்பு பெண்களைக் குறி வைத்தே திட்டமிடப்பட்டது என்பதை யாரும் எளிதாகக் கணித்து விடுவார்கள். ஆனால், ஸ்டாலினின் இந்த முயற்சி பொங்கல் தொகுப்பு வழங்குவதில் ஏற்பட்ட ஏகப்பட்ட சிக்கல்களால் நினைத்தளவு கைகூடவில்லை.

இதனால் அதிருப்தியடைந்த முதல்வர் பொங்கல் சிறப்புத் தொகுப்புத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைத்து அமைச்சர்கள், பிரமுகர்கள் மட்டுமன்றி அவர்தம் உறவினர்கள் வரை விசாரணை செய்யப் பணித்திருக்கிறார் என்று கட்சி வட்டாரத்தில் இருந்து செய்திகள் கசிந்திருக்கின்றன.

இதிலும் அரசியல் இல்லாமல் இல்லை மக்கள் நலப்பணிகளில் முதல்வர் ஆர்வம் காட்டுவதுடன் அவற்றைச் செயற்படுத்துவதற்கும் முழு மூச்சாகப் பாடுபடுகிறார் என்றாலும் அமைச்சர்கள், அதிகாரிகள் தான் அதை மக்கள் வரை கொண்டு போய்ச் சேர்ப்பதில்லை என்பதைப் பிரகடனப்படுத்துவதுடன் அது போன்ற சந்தர்ப்பங்களில் முதல்வர் எந்தவித பாரபட்சமும் இன்றி தமது கட்சி உறுப்பினர்கள் மீதே ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்து வருகிறார் என்பதையும் மக்கள் மனங்களில் அழுத்தமாகப் பதிய வைத்திருக்கிறார் முதல்வர்.

ஆனால் பொதுத் தேர்தலின் போதும் இதேபோக்கை முதல்வர் கடைப்பிடிப்பார் என்பது சந்தேகமே. ஒருபுறம், அரசியல், தேர்தல், கட்சி, கூட்டணி என்று தி.மு.க.வினர் தூள் கிளப்பிக் கொண்டிருக்க ஏதாவதொரு நடவடிக்கை அல்லது திட்டத்தைக் கையிலெடுத்து அதன்மூலம் தமிழகத்தின் ஒட்டுமொத்த கவனத்தையும் தம் பக்கம் ஈர்ப்பதற்கு பா.ஜ.க.வும் பயங்கர முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26ஆம் திகதி இந்தியக் குடியரசு தினம் கொண்டாடப்படுவது அனைவரும் அறிந்ததே. அரசு சார்பாக அன்றைய தினத்தில் இந்தியத் தலைநகர் டெல்லியில் ஒவ்வொரு மாநிலத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அலங்கார ஊர்திகள் பவனி நடைபெறுவது வழக்கம்.

இம்முறை, அந்த அலங்கார ஊர்வலத்தில் தமிழகம் மற்றும் மேற்கு வங்கத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இது மேற்படி இரண்டு மாநில அரசுகளுக்கும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

மேற்படி இரண்டு மாநிலங்களிலும் காலூன்றுவதற்கு பா.ஜ.க. பெரும்பாடு பட்டு வருகிறது. ஆனால் அதற்கு நிகரான பலன் எதையும் பா.ஜ.க.வால் இது வரை காலம் பெற்றுக் கொள்ள முடியாமலேயே இருந்து வருகிறது. இதை மனதில் கொண்டே மத்திய அரசு இந்தப் "பழிவாங்கல்" நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பது வெள்ளிடை மலை.

என்றாலும் மத்திய அரசிடம் மாநிலம் சார்பில் வாகனப் பேரணியில் கலந்து கொள்ள அனுமதி வழங்க வேண்டும் என்று தமிழக அரசு கேட்டுக் கொண்டுள்ளது. அதற்கான அனுமதி வழங்கப்படுமா இல்லையா என்பது டெல்லிக்கு மட்டுமே தெரிந்த இரகசியம்.

# இந்திய மீனவர்களின் படகுகளை ஏலத்தில் விற்பனை செய்வதை வரவேற்கும் யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சங்கம்

இலங்கை கடற்படையால் கடந்த காலங்களில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக அரசுடைமையாக்கப்பட்ட பல இந்திய மீனவர்களின் படகுகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 1ஆம் திகதியில் இருந்து சில தினங்களுக்கு வட மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஏலம் விடுவதற்கு இலங்கை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறது.இந்தச் செயற்பாடு காலம் கடந்ததாக இருந்தாலும் அதனை நாங்கள் வரவேற்கின்றோம் என யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னராசா தெரிவித்தார்.

அரசியல் செல்வாக்குள்ள தமிழ்நாட்டு முதலாளிகளே இழுவைமடி தொழிலை இங்கு ஊக்குவிக்கின்றனர். அவர்களது படகுகளே இதனால் பாதிப்படையும். ஒரு சில நாட்டுப்படகுகளும் இதனுள் இருப்பதாக அறிகிறோம்.இலங்கையின் சட்டம் என்று வரும் போது நாட்டுப்படகு விசைப்படகு என எல்லாம் ஒன்றுதான்.இதனால் தமிழ்நாட்டில் உள்ள சாதாரண மீனவர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை. தற்போதும் பருத்தித்துறை தொடக்கம் மருதங்கேணி வரையிலான பகுதிகளில் பல நூறு படகுகளில் இந்திய மீன்பிடி படகுகள் அத்துமீறி வந்ததை அவதானிக்க முடிந்தது. இதனால் உள்ளூர் மீனவர்கள் அச்சத்திலேயே தொழிலுக்குச் செல்லாமல் திரும்பி வந்து



விட்டனர். அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுபவர்களை இலங்கை கடற்படை தொடர்ந்து கைது செய்ய வேண்டும் என யாழ் ஊடக அமையத் தில் 25 ஜன 2022 செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க இலங்கை கடற்பரப்பில் வைத்து கடந்த டிசம்பர் மாதத்தில் கைதான 55 இந்திய மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு மற்றும் எழுவைதீவு அருகே கடந்த வருடம் டிசம்பரில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 55 பேருக்கான ஆறு மாதகால சாதாரண சிறை ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இவர்களது கைவிரல் அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 5 வருட காலத்தில் மீண்டும் இலங்கை பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டால் அவர்களை உடனடியாக கைது செய்யப்படுவர் என்று நீதவான் கஜநிதிபாலன் உத்தரவிட்டார். ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்த வழக்கு எடுக்கப்பட்ட நிலையில் இந்திய மீனவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் ஊடாக இந்தியாவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவும் நீதவான் உத்தரவிட்டார்.


இதேவேளை தமிழக மீனவர்களின் 105 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்தப் படகுகளை அரசுடைமையாக்கியுள்ள இலங்கை அரசு படகுகள் பகிரங்க ஏலம் விடப்படும் என அறிவித்துள்ளது.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்தி படகுகளை மீட்க மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். நீண்ட நாட்களாக வாங்க திட்டமிட்ட வாகனம் சொத்து மற்றும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். எதிர்பாராத அதிர்ஷ்டமும் கிடைக்கலாம். சொத்துக்களில் இருந்த சுணக்க நிலை மாறும். உடல் ஆரோக்யம் உண்டாகும். தெய்வ பக்தி அதிகரிக்கும். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை வந்து நீங்கும். உறவினர்களிடம் நிதானமாக பேசுவது நல்லது. பிள்ளைகளை அனுசரித்து செல்வது நன்மை தரும். தொழில் வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் அனுசரித்து நிதானமாக நடந்து கொள்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் சிறிய வேலைக்கும் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். பெண்களுக்கு பயணங்களின் மூலம் நன்மை உண்டாகும்.




ரிஷபராசி அன்பர்களே! சுபச்செலவுகள் உண்டாகும். மற்றவர்களால் மனக் கஷ்டம் ஏற்படும்.அடுத்தவர்கள் கடனுக்கு பொறுப்பேற்காமல் இருப்பது நல்லது.எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டி இருக்கும். எதிர்காலம் பற்றிய மனக் கவலை நீங்கும். குடும்பத்தினரின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். கணவன், மனைவிக்கிடையே விட்டு கொடுத்து செல்வது நல்லது. பிள்ளைகள் கல்வி மற்றும் அவர்கள் எதிர்காலம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். புதிய ஆர்டர்கள் பெறுவதில் தடுமாற்றம் உண்டாகும். எந்த வேலையை முதலில் கவனிப்பது என்ற குழப்பம் வரும். உத்யோகத்தில் நீண்ட நாட்களாக தள்ளிப்போன பதவி உயர்வு வர வேண்டிய பணம் வந்து சேரும்.





மிதுனராசி அன்பர்களே! மற்றவர்களுடன் இருந்த பகை நீங்கும். முடங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு கை கொடுப்பர். பணநெருக்கடி குறையும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வீடு மனை சார்ந்த கடன் பிரச்னை அகலும். குடும்பத்தில் இருப்பவர்களால் டென்ஷன் உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையில் கருத்து வேற்றுமை வராமல் இருக்க மனம் விட்டு பேசுவது நல்லது. பிள்ளைகள் நலனில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் டென்ஷனுடன் காணப்படுவர். நீண்ட நாட்களாக இருந்து வந்த மனக்கிலேசங்களில் தெளிவான நிலை ஏற்படும்.




கடகராசி அன்பர்களே! எதிர்பாராத திருப்பம் உண்டாகும். பயணங்களின் போதும், வாகனங்களை ஓட்டி செல்லும் போதும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. வீடு மனை சொத்துக்களில் இருந்த பிரச்னைகள் அகலும். குடும்பத்தில் எதிர்பார்த்த சுமுகமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி இருவரும் சேர்ந்து எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகள் மூலம் பெருமை கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் புதிய ஆர்டர்கள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். உத்யோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் உதவியும், ஆலோசனையும் கிடைக்கும். புதிய வேலைக்கான முயற்சிகளில் சாதகமான போக்கு காணப்படும். பெண்கள் எடுத்த காரியத்தை செய்து முடிக்க அலைய வேண்டி இருக்கும். சிந்தித்து செயல்படுவது காரிய வெற்றிக்கு உதவும்.





சிம்மராசி அன்பர்களே! ராசிநாதன் சுக்கிரன் மூலம் எதிர்ப்புகள் விலகும். பணவரத்து திருப்தி தரும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். தனிமையாக இருக்க நினைப்பீர்கள். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படலாம். உறவினர்களுடன் அனுசரித்து செல்வதும், வாக்குவாதத்தை தவிர்ப்பதும் நல்லது. பிள்ளைகளிடம் அன்பாக நடந்து கொள்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டு செய்யும் காரியங்கள் நல்ல பலன் தரும். பெண்களுக்கு உங்களது செயல்களில் மற்றவர் குறை காண நேரலாம். கவனம் தேவை.




கன்னிராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் இருந்த தடுமாற்றம் நீங்கும். எதிர்ப்புகள் குறையும். வீடு மனை சார்ந்த விஷயங்கள் அனுகூலம் தரும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையில் திடீர் இடைவெளி ஏற்படலாம். பிள்ளைகள் அறிவுத்திறன் கண்டு ஆனந்தப்படுவீர்கள். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண மிகவும் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். பெண்களுக்கு பணவரத்து திருப்தி தரும் விதத்தில் இருக்கும். காரியங்கள் சாதகமாக முடியும். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். ஐயப்ப தரிசனம் கோடி புண்ணியம்.







துலாம் ராசி அன்பர்களே! திட்டமிட்டு எதையும் செய்வது நல்லது. மனதில் இருந்த வீண்கவலைகள் நீங்கும். அடுத்தவரை நம்பி எதையும் ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. சுபச்செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் தீரும். கணவன் மனைவிக்கிடையே இருந்த குழப்பங்கள் நீங்கும். பிள்ளைகள் கல்வியில் அக்கறை காண்பிப்பீர்கள். நண்பர்கள் உறவினர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த புதிய ஆர்டர்கள் வந்து சேரும். தொழில் தொடர்பான செலவு கூடும். உத்யோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்த்தபடி பணிகள் முடியாமல் மனசங்கடத்திற்கு ஆளாக நேரிடும். பெண்கள் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் இருந்த இழுபறியான நிலை மாறும். சாதாரணமாக செயல்பட்டாலும் அது மிகப் பெரிய வெற்றி பெறும். குடும்பத்தில் இறுக்கமான சூழ்நிலை காணப்படும். மனதில் இருப்பதை வெளியில் சொல்லாமல் செய்கையில் காட்டுவார்கள். கணவன், மனைவிக்கிடையில் இணக்கமான போக்கு காண்பது சிரமம். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்வீர்கள். உத்யோகத்தில் அதிகநேரம் உழைக்க வேண்டி இருக்கும். மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது. பெண்கள் எந்த இக்கட்டான சூழ்நிலையையும் மனஉறுதியுடன் சமாளித்து வெற்றி காண்பர். எண்ணியதை செய்து முடிக்க முடியாமல் இருந்த தடங்கல்கள் அகலும்.




தனுசுராசி அன்பர்களே! நிதானமாக எந்த முடிவையும் எடுப்பீர்கள். நீண்ட நாட்களாக இருந்த பிரச்னை குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும். விருப்பமானவர்களுடன் சந்திப்பு ஏற்படும். வாக்குவன்மை நன்மையை தரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் அதிகரிக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். பிள்ளைகள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். தொழில் வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. பழைய பாக்கிகளை வசூல் செய்வீர்கள். பெண்களது முயற்சிகளுக்கு இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். உத்யோகஸ்தர்கள் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணி சிறப்புப் பெறும்.




மகரராசி அன்பர்களே! வீண்செலவு குறையும். சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் அதை செய்ய முடியாத சூழ்நிலை வரும். எதிலும் ஈடுபடாமல் ஒதுங்கி சென்றாலும் மற்றவர்கள் விடாமல் வம்புக்கு இழுப்பர். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த சில காரியங்கள் நடந்து முடியும். வீடு மனை சார்ந்த சொத்து பிரச்சனைகள் அகலும். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே இடைவெளி குறைய மனம் விட்டு பேசுவது நல்லது. பிள்ளைகள் எதிர்கால நலனுக்காக பாடுபட வேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி நடந்தாலும் சற்று நிதானமாக இருக்கும். போட்டிகள் தலைதூக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை பளு, வீண் அலைச்சல் குறையும். பெண்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும்.




கும்பராசி அன்பர்களே! தைரியம் அதிகரிக்கும். மங்கள் செலவுகள் ஏற்படும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். மற்றவர்கள் உங்களின் பிரச்னைகளுக்கு வலிய வந்து உதவிகள் செய்வர். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். உறவினர்கள் வருகை அதனால் நன்மையும் இருக்கும். கணவன் மனைவிக்கிடையில் நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளின் அறிவுதிறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது. விருந்தினர் வருகை உண்டு. பெண்கள் எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. உடமைகளை கவனமாக பார்த்துக் கொள்வது நல்லது.




மீனராசி அன்பர்களே! வீண் கவலை அகலும். மற்றவர்கள் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. வெளி வட்டார தொடர்புகளில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் புதிய ஆர்டர் பிடிக்க அதிகம் அலைய வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். எடுத்த வேலையை செய்து முடிப்பதற்குள் பல தடங்கல்கள் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களின் செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இருக்கும். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படும். பிள்ளைகளை அனுசரித்து செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும், பயணங்களின் போதும் கூடுதல் கவனம் தேவை. நண்பர்கள் உறவினர்களிடம் பேச்சில் கவனத் தேவை. பெண்களுக்கு பணத்தேவை பூர்த்தியாகும். நெருக்கடியான நேரத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

# பொங்கலுக்கு முதல் நாள் நடந்த ஒரு பொங்கல்!

(7ம் பக்கத் தொடர்ச்சி) மற்றும் தமிழ் கட்சிகளின் பொறுப்பு. கைதிகளுக்காக கைதிகளும் விடுவிக்கப்பட்ட கைதிகளும் தான் போராடுவது என்பது தமிழ் அரசியலின் கையறு நிலையைக் காட்டுகிறது. காணா மல் ஆக்கப்பட்டவர்களுக்காக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தான் போராட வேண்டியிருப்பது என்பது தமிழ் அரசியலின் கையறு நிலையை காட்டுகிறது. இந்த லட்சணத்தில் போராடுவோம் போராடுவோம் என்று தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் கடந்த 12 ஆண்டுகளாக பொய் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக போராடிக் கொண்டிருப்பது யார் என்று பார்த்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தான். அவர்களுடன் நிற்பது யார் என்று பார்த்தால் மிகச் சில அரசியல்வாதிகள் தான்.

- நிலாந்தன்

# கோவிட்-19 பூஸ்டர் தடுப்பூசியை எடுத்துக்கொள்ளுங்கள்.

இன்றே உங்கள் பூஸ்டர் தடுப்பூசியை முன்பதிவு செய்யுங்கள்.

கோவிட்-19 -இலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

நமது பாதுகாப்பு நம் அனைவரின் கையில்.



**ontario.ca/covid19** -ஐ சென்று பாருங்கள்
ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

**Ontario**




# Affordable Condo Town House in Oshawa

Simcoe St./Conlin Rd., Near University

**$499.999**

Bedroom: 3
Washrooms: 3
**3 Years New**





A Great Investment Property!

* Amazing Opportunity Within Reach In Northern Oshawa**



Fully Furnished 3 Yr New 3 Bedrooms Town Home Corner Unit. W/3 Attached Bathroom. W/I Closets In Each Bedroom. Open Concept Layout. Kitchen With Granite Counter Top. Stainless Steel Appliances & Centre Island With Breakfast Bar. Steps Heart Of University Town! Walking Distance To Tech University & Durham College. Close To Hwy 407. Public Transit And Franchise Take Outs...



For More Information Please Call **Kamal** Navaratnam
Sales Representative
Direct: **416-450-2424**
E mail:kamal@kamalrealtor.ca



RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage

RE MAX Community Realty Inc. Brokerage
1265 Morningside Ave., Suite 203
Toronto, ON M1B 3V9
Office: 416-287-2222
Fax: 416-2824488
Independently Owned and Operated

*Trusted and reliable services*


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc.,


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


காப்புறுதிச் சேவையில் 20 ஆண்டுகள்
ஆதரவு தந்த அனைவருக்கும்
நெஞ்சார்ந்த நன்றி
DISABILITY INSURANCE
SUPER VISAS
NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS
RRSP & RESP
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
647 401 5800 / 416 439 2800
218 EXPORT BLVD, MISSISSAUGA, SUITE 209-211, L5S 0A7